30

# ஹிராடெட்டஸின்



நம்மை மேமபடுத்தும்
எண்ணங்கள்

# ஹிராடெடஸின்
## நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்
## (வரலாற்று ஞானி ஹிராடெடஸ்)

புலவர் ***என்.வி. கலைமணி*** எம்.ஏ.,

**பாரதி நிலையம்**
126 / 108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.

விலை : ரூ. 25.00

❑ HERATATASIN NAMMAI MAEMBADUTHUM ENNANGAL ❑ By : N.V. Kalaimani ❑ First Edition: December 2002 ❑ Price Rs. 25.00 ❑ Copyright Holder & Publisher : BHARATHI NILAIYAM, 126/108, Usman Road, T.Nagar, Chennai - 17. ❑ Printed at : Sivakami Printo Graphics, 160/117, Big Street, Triplicane, Chennai-600 005. ❑ ☎ : 28445051 ❑

# ஹிராடெடஸின்
# நம்மை மேம்படுத்தும்
# எண்ணங்கள்

# வரலாற்றின் வாயில்கள்


| | | |
|---|---|---|
| 1. | உலக நாகரிகத்தின் தொட்டில் | 5 |
| 2. | வரலாற்றின் - வரலாறு | 11 |
| 3. | தமிழர் புகழ் | 18 |
| 4. | பினீசியர்களும் - கிரேக்கர்களும் | 24 |
| 5 | தமிழர்களின் கடற்பயணம் | 32 |
| 6. | உலகின் பல பகுதிகளில் தமிழர் குடியேற்றங்கள் | 32 |
| 7. | ஹிராடெடசின் சில நீதிக் கதைகள்! | 39 |
| 8. | தொட்டது எல்லாம் பொன் | 43 |
| 9. | சட்ட ஞானி - சோலான் | 49 |
| 10. | வராக அவதாரம் வந்தது எப்படி? | 54 |
| 11. | சிறுத் தொண்டரும் சிவகவியும்! | 56 |
| 12. | உலகமக்கள் இடையே தமிழர் பழக்க வழக்கங்கள் | 64 |
| 13. | தமிழர் வரலாறு எழுதிட ஹிராடெடஸ் தரும் ஊக்கம்! | 76 |

# வரலாற்று ஞானி ஹிராரெடடஸின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

## 1. உலக நாகரீகத்தின் தொட்டில்

இன்றைக்கு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ் இலக்கண, இலக்கியங்களில் சிறந்து விளங்கி, பேசப்பட்டும், எழுதப்பட்டும் வந்த ஒரு மொழியாகும். அதே காலத்தில்; கிரேக்கம் - எபிரேயம் - சீனம் - சமஸ்கிருதம் போன்ற மொழிகளும் பேசவும், எழுதவும் கூடிய நிலையிலிருந்தன.

பண்டையத் தமிழ் இலக்கண இலக்கியங்களான அகத்தியம், தொல்காப்பியம், திருக்குறள், அக நானூறு, புறநானூறு, எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவக சந்தாமணி போன்ற நூல்கள் எல்லாமே செய்யுள் வடிவிலேயே எழுதப்பட்டன.

அது போலவே கிரேக்க இலக்கணமான கிரமேடிஸ், மற்றும் ஹோமர் எழுதிய இலியட், ஓடிசி போன்ற கிரேக்க காவிய புராணங்கள் அனைத்துமே செய்யுட் கோவைகளாகவே எழுதப் பட்டன.

இந்தியாவின் ஆதிக் காவியங்களான இராமயணம், பாரதம் போன்றவையும் சமஸ்கிருதச் செய்யுள் வடிவிலேயே அமைந் துள்ளன. இவை மட்டுமல்ல, நான்மறைகள்., உபநிடதங்கள் ஆகமங்கள் எல்லாமே செய்யுள் வடிவிலேயே உள்ளன.

சீன மொழியின் இலக்கணமான ஷென்மிங் என்ற ஒலி யிலக்கணமும் சீன மொழிச் செய்யுள் உருவத்தோடுதான், இய்ற்றப்பட்டிருக்கிறது.

முற்காலத்தில் வழங்கி வந்த உலகமொழிகளுள், கிரேக்கமும் தமிழுமான இரண்டு மொழிகளில் உள்ள சொற்கள் ஒன்றுடன் ஒன்று கலந்திருக்கின்றன. இந்தக கலப்பு எப்படி ஏற்பட்டது?

கிரேக்க நாடும், தமிழ் நாடும் வியாபாரத்தில் சிறப்புற்று விளங்கியபோது ஏற்பட்ட வணிகப் பரிமாற்றத்தால் மொழிக் கலப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பது மொழி ஆய்வாளர்களது முடிவாகும்.

கிரேக்க மொழியில் பரவிக் கிடக்கும் தமிழ்ச் சொற்களிலே சில வற்றை எடுத்துக் காட்டுக்காகக் கீழே தந்துள்ளோம்; ஓசைகளை உற்று நோக்கிப் பொருள்களையும் பாருங்கள்:

| <u>கிரேக்கம்</u> | : | <u>தமிழ்</u> |
|---|---|---|
| ஆரம் (பொன்) | : | ஆரம் |
| ப்ளுமி | : | பீலி அல்லது மயில்தோகை |
| ஷோரா | : | சோதிடத்தில் வரும் ஓரை என்ற சொல் |
| ஆக்சிஸ் (Axis) | : | அச்சு |
| அடிடே (Aditate) | : | அடு (சேர்) |
| எமிஸ் (Emis) | : | ஆமை |
| அனிமா (Anima) | : | ஆன்மா |
| செஞ்சிம் (Sensim) | : | இஞ்சி |
| ஏனம் (Aena) | : | ஏனம் (பாத்திரம்) |
| யூனி (Uni) | : | ஒன்று, ஒன்னு |
| கடோ (Cado) | : | கட, (அகழ்) |
| குரோகோடைல் (Crocodile) | : | கரா (முதலை) |
| கெனா (Kena) | : | கனவு |

| | | |
|---|---|---|
| கேடா (Keda) | : | கேடு |
| சண்டலம் (Santalium) | : | சந்தனம் |
| சேபியோ (Sapio) | : | சப்பு (சுவை) |
| டிம்பனம் (Tympanam) | : | தம்பட்டம் |
| டெட்ரா (Terra) | : | தரை |
| தேபா (Theba) | : | தெப்பம் |
| நாரி (Nari) | : | நாரி அதாவது பெண் |
| நேவல் (Naval) | : | நாவாய் |
| நோஸ் (Nose) | : | நோய் |
| பெர்ல் (Pearl) | : | பரல் |
| பலிஸ் (Polis) | : | பள்ளி |
| பாண்டஸ் (Pondus) | : | பாண்டில் (வளைந்த) |
| பில்லா (Pilla) | : | பிள்ளை, (பெண்) |
| ஃபெலிஸ் (Felis) | : | புலி |
| எலிபாஸ் (Elephas) | : | யாளி, யானை |
| ஹீரோ (Hero) | : | வீரா |
| ஹீரா (Hera) துர்க்கை | : | வீரி, காளி |

மேலே உள்ள தமிழ்ச் சொற்களுக்கும் கிரேக்கச் சொற்களுக்கும் இடையே உள்ள, பொருள் ஒலியோசைகளைப் பார்த்துப் புரிந்து கொண்டிருப்பீர்கள். இப்போது கீழே கொடுக்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்களுக்குரிய சமஸ்கிருதம் மற்றும் அதற்கான ஆங்கிலச் சொற்களின் ஓசைகளையும், பொருள்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், மொழிக் கலப்பும் அவற்றின் பொருள்களும் புரியும். இதோ கீழே தந்துள்ளோம் ; நோக்குக.

| சமஸ்கிருதம் | கிரேக்கம் | ஆங்கிலம் |
|---|---|---|
| மாத | மேடர் | MOTHER |
| பிதா | பேடர் | FATHER |
| பிராதா | பிரேடர் | BROTHER |

| | | |
|---|---|---|
| ஸ்வப்னா | சோம்னி | SOMNAM DREAM |
| ஏகம் | யூனு | ONE |
| துவம் | துவோ | TWO |
| திரயம் | திரிணி | THREE |
| சதுர் | குவாடர் | QUATRO, FOUR |
| பஞ்சம் | குயினி | FIVE |
| சஷ்டம் | செக்ஸ்டம் | |
| | ஹெக்ஸா | SIX |
| அஷ்டம் | அக்டோ | EIGHT |
| நவம் | நவம் | NINE |
| தசம் | டெசிம் | TEN |
| சர்ப்பம் | செர்பென் | SERPENT |
| அங்கஷ்டம் | அங்கஷ்ட | THUMB |
| ஆத்மா | அனிமா | SOUL |

கீழே தமிழ்ச் சொற்களில் சில, பீனிசிய மொழியில் கலந்துள்ளமையைக் கவனிக்கவும். அந்தச் சொற்களின் ஓசை, பொருள் ஆகியவற்றையும் கூர்ந்து நோக்கவும்.

| <u>தமிழ்</u> | <u>பீனிசிய மொழி</u> |
|---|---|
| பரிசு (தெப்பம்) | போர்ஸா |
| நாரி (பெண்) | நாரி (பெண்) எநாரி, பெண்கள் நோய் |
| பனை, தென்னை | பாம் |
| பனையேறிகள் | பினீசியர் |

- மேற்கண்டவை வி.எஸ்.வி. ராகவன் எழுதிய 'ஹிராடெடஸ்' என்ற ஆய்வு நூல் குறிப்புகள்.

சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்ட வால்மீகி இராமா யணத்திலே தமிழ் நாட்டைச் சேர்ந்த தற்போதைய ஊர்களான முசிறி, திருவெண்காடு, காவிரிப் பூம்பட்டினம் தனுஷ்கோடி, சேது சமுத்திரமும், சங்ககால நகரான கபாடபுரமும் வால்மீகியால் குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

தமிழ் நாட்டுத் துறை முகங்களிலிருந்து முத்து, பொன், மயிலிறகு, மிளகு, சடா மஞ்சி ஆகிய வாசனைப் பொருட்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட கப்பல்கள், கிரேக்கம், எகிப்து 'ரோம்' நாட்டு நகரங்களுக்குச் சென்று வாணிகம் நடத்தியுள்ள குறிப்புக் களை, அகநானூறு, புறநானூறு, சிறு பாணாற்றுப் படை, மதுரைக் காஞ்சி, நற்றினை, பட்டினப்பாலை, கலித்தொகை, மலைபடுகடாம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பண்டையத் தம்ழ் நூல்கள் இன்றும் அறிவித்துக் கொண்டே இருக்கின்றன.

நமது தமிழ் நூல்களது ஆய்வுகள் மட்டுமல்ல; கடற்பயண யாத்திரிகர்களான பிளினி, பெரிப்ளஸ், தாலமி, ஸ்டிராபோ, செனபான், மெகஸ்தனிஸ், அரியன் இண்டிகா போன்ற மேல் நாட்டு அறிஞர்களும், அவர்களது ஆய்வுக் குறிப்புகளும் மேற்கண்ட வாறே கூறுகின்றன.

இவற்றால் நாம் அறிவது என்ன? தமிழ்நாட்டுக்கும் மேற்கே உள்ள நாடு நகரங்களுக்கும் இடையே. நீண்ட நெடுங்காலமாகவே, வாணிகம் வழியாக தொடர்பு இருந்தது என்றும், அதனால் தமிழ் மொழிச் சொற்கள், கலைகள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் மேல் நாடுகளிலும் பரவியிருந்தன என்பதையும் தெளிவாகவே உணர முடிகின்றது அல்லவா? மேற்கே கிரேக்க நாடு, எகிப்து, கிழக்கே சீனநாடு இம் மூன்று நாடுகளுக்கும் இடையிலே தமிழ் நாடு அமைதிருந்த தட்ப வெட்ப நிலையும் தமிழ்நாட்டின் சிறப்பு அமைப்புக்கு ஒரு காரணமாகும். கடல் கொந்தளிப்பு, மன்னர்களது போர்கள், எரிமலை வெடிப்புக்கள், பூகம்பப் பிளவுகள் அடிக்கடி

நிகழாத நாடு தமிழ்நாடு ஆனால், மேற்குறிப்பிட்ட இயற்கைச் சீற்றங்கள் கிரேக்கம், சீனா, எகிப்து நாடுகளை அடிக்கடி சீரழித்து நிலைகுலைய வைத்து, பூகோள அமைப்பையே உருக்குலைத்தன. இது போன்ற ஆபத்தும் - அபாயமும் இன்றுவரை தமிழ் நாட்டுக்குக் கிடையாததும் ஒரு முக்கியச் சிறப்பாகும்.

எகிப்து நாட்டில் பாயும் நைல் நதி, மெசபடோமிய மண்ணில் பாய்ந்தோடிடும் டைக்ரிஸ், யூப்ரடிஸ் நதிகள், சீன நாட்டில் ஓடும் மஞ்சள் நதி ஆகியவற்றின் நீர்ப் பெருக்கும், வெள்ளச் சீற்றங்களும் அடிக்கடி தோன்றி அந்தந்தப் பகுதிகளின் நாகரிகங்களை நாசமாக்கிவிட்டன. அதனால், நைல்நதி நாகரிகம், பாபிலோனிய நாகரிகம், அஸ்ஸிரிய நாகரிகம், மஞ்சள் நதியின் சீன நாகரிகம் எல்லாமே நிலைபெறாமல் போய்விட்டன.

அதுபோலவே, இந்திய நாட்டின் பிரம்மபுத்ரா நதி, சிந்து நதி, கங்கை நதிகளின் வெள்ளப் பெருக்குச் சீற்றங்களும் அப்பகுதியில் வளர்ந்த வட ஆரிய நாகரிகத்தை வளர விடாமல் தடுத்துச் சீரழித்து விட்டன. ஆனால், தமிழ்நாடு அப்படிப்பட்ட நிலையிலே இருந்து தப்பித்துவிட்டது.

தமிழ் நாட்டிலுள்ள காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகளின் நீர்ப் பெருக்காலும், வெள்ளச் சீற்றங்களாலும் எந்த வித ஆபத்தோ அழிவோ தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டதில்லை. கடல் கொந்தளிப்புகளாலும் சேதம் இல்லை. பூகம்ப அபாயங்களால் பாதிப்புக்கள் இல்லை. ஏனென்றால் தமிழ் நாடு ஒரு பீடபூமி அமைப்புடைய இயற்கையான நாடு. அதனால் இயற்கையான ஆபத்துகளற்ற நாடு.

இத்தகைய ஓர் இயற்கை அமைப்புச் சூழ்ந்த தமிழ் நாட்டில் தோன்றிய தமிழர்நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்களை இங்குள்ள மக்கள் காப்பாற்றிப் பாதுகாத்துவந்தார்கள்.

எனவே, கிரேக்க நாகரிகம், எகிப்திய நாகரிகம், தமிழ் நாகரிகம், ஆரிய நாகரிகம் போன்ற உலக நாகரிகங்களுள் இன்று பல

நாகரிகங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டதால், தமிழர் நாகரிகம் ஒன்று மட்டும்தான் அருகம்புல் போல் வேர் படர்ந்து பரவி, ஆல்போல விழுதுகள் விட்டு உலகிலே பழம்பெரும் நாகரிகங்களின் தாயாக இன்றும் காட்சியளித்துக் கொண்டிருக் கின்றது.

அதனால், கிரேக்க நாகரிகத்துக்குள் தமிழர் நாகரிகமும், பண்பாடும், பழக்க வழக்கங்களும், தமிழ்ச் சொற்களும் புகுந்துள்ளதை ஆராய்ச்சியாளர்கள் தக்கச் சான்றுகளோடு விளக்கி உள்ளார்கள். அதிலும் குறிப்பாக, ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்கள் அலாஸ்கா என்ற வட அமெரிக்கத் தீபகற்பம் வழியாக அமெரிக்கா சென்று அங்கேயும் தமிழர் நாகரிகத்தைப் பரப்பிய செய்திகளையும் நாம் வரலாற்றிலே படிக்கின்றோம்.

எனவேதான், உலக நாகரிகங்களை ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் எல்லாரும் தமிழ் பண்பாடுகள் தான் உலக நாகரிகங்களுக்கே பெரும் வளத்தை வழங்கியுள்ளது என்பதைத் தெளிவாகவே கூறியுள்ளார்கள். அது மட்டுமன்று, தமிழ்நாடுதான் உலக நாகரிகங்களின் தொட்டில் என்றும் வரலாற்று ஆதித் தந்தையான ஹிராடெடஸ் என்ற மேதை தான் எழுதிய வரலாற்று நூலிலே குறிப்பிட்டிருக்கிறார்.

## 2. வரலாற்றின் வரலாறு!

**ஹி**ராடெடஸ் என்ற சரித்திரத்தின் நாயகன் - வரலாற்றின் ஆதித் தந்தை என்று, வரலாற்று ஆசிரியர்கள் போற்றுகிறார்கள், வாழ்த்துகிறார்கள். வரலாறு என்பது இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற வரைமுறையை உலகுக்கு முதன் முதலில் விளக்கி எழுதியவரும் ஹிராடெடஸ் என்ற மேதைதான். அப்படியானால், ஹராடெடசுக்கு முன்னால் வரலாறு என்ற துறையே இல்லையா?

இவருக்கு முன்பு வேறு யாரும். எந்த வித வரலாற்றையும் எழுதவில்லையா? என்று கேட்கக் கூடும்.

ஹிராடெடசுக்குப் பின்னர், சில நூற்றாண்டுகள் ஓடி ஓய்ந்த பின்புதான், வரலாறு ஒரு வரம்போடு, ஒழுங்காக, விவரமாக எழுதவே துவங்கப் பட்டது. எனவேதான், சரித்திரத்தினை எழுதப் புகுந்தவர்களுள் ஹிராடெடஸ் முதன்மையானவர் என்ற பெயரைப் பெற்றார். இக் காரணத்தால் தான் ஹிராடெடசை வரலாற்றின் ஆதித் தந்தை என்று வரலாற்று உலகம் வாழ்த்துகிறது; போற்றுகிறது!

வரலாற்றுச் சம்பங்கள் ஒவ்வொன்றும் அழிந்து விடாமல் காப்பாற்றப் படவேண்டும். என்று, அவர் ஏன் குறிப்பிட்டார் என்பதை நாம் நன்கு சிந்திக்க வேண்டும்.

வரலாற்றை எழுதிய வரலாற்று மேதை ஹிராடெடசினுடைய வாழ்க்கைக் குறிப்புக்கள், அவரது வாழ்க்கைச் சம்பங்கள், சரியாகவே இன்றும் கூடக் கிடைக்கவில்லை என்றால், அவர் எழுது கோலை ஏந்திய போது மட்டும் எப்படிக் கிடைத்திருக்க முடியும்? அதனால்தான், வரலாறு எழுதும் போது தான் அனுபவித்த அவல அனுபவங்களை எண்ணி, எதிர்கால உலகத்திற்கு அறிவுரை கூறும் எண்ணத்தில், வரலாற்று நிகழ்ச்சிகளை அழிந்து போகாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு ஓர் அடையாளமாக தனது நூல் அமையவேண்டும் என்ற சிந்தனையிலே அவர் தனது ‘வரலாறுகள்’ என்ற நூலை எழுதிக் காட்டினார்.

கிரேக்க நாட்டிற்கும் பாரசீகப் பேரரசகளுக்கும் இடையே நாடந்த போர்க்கள நிகழ்வுகளையே அவர் ‘வரலாறு’ என்று பெயரிட்டார். பாரசீகர்களின் பழக்க வழக்கங்களையும், பாபிலோனிய மக்கள், எகிப்தியர்கள், இந்தியர்கள், பினீசியர், லிபியர் போன்ற மற்ற பிற மன்னர்களின் அன்றைய பழக்க

வழக்கங்களையும் அவரது நூலிலே விரிவாக விளக்கி எழுதி யுள்ளார். எனவே, நுணுக்கமாகப் படிக்க வேண்டிய ஒரு வரலாற்று நூலாகவே அது அமைந்துள்ளது.

இந்திய வரலாற்றில் பாலைவனப் பகுதி மணல்களிலே வாழும் பொன் அகழும் எறும்புகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அந்த எறும்பு குள்ள நரியை விடப் பெரியதாம், நம்நாட்டு எறும்புகள் மண்ணை வெளியே கொண்டுவந்து தள்ளுவதைப் போல, பொன் அகழும் எறும்புகளும் குவியல் குவியலாக மண்ணை வெளியே கொண்டு வந்து தள்ளுகின்றனவாம். அந்த மண்ணிலே உள்ள பொன்னை எடுக்க மக்கள் ஒட்டகச் சவாரியோடு போய் பொன்னை எடுத்து வருவார்களாம்!

இந்த அற்புத இந்திய வரலாற்றைத் தேடிக் கண்டுபிடித்து வரலாற்றுச் சம்பவமாக்கியவர் யார் தெரியுமா? வரலாற்று ஞானி ஹிராடெடஸ்.

இத்தகைய அரிய வரலாற்று மேதையான ஹிராடெடஸ், ஆசிய மைனர் Asia minor என்ற நாட்டின் தென்மேற்கே இருந்த காரியா எனும் நகரப் பகுதியைச் சேர்ந்த ஹரிகார்னஸ் என்ற ஊரிலே கி.மு. 484 ஆம் ஆண்டில், லிக்சஸ் என்ற தந்தைக்கும், டிரேயா என்ற தாயாருக்கும் பிறந்தார்.

அவர் பிறந்த நேரத்தில் அந்தப் பகுதியிலேயும், ஊரிலேயும் வாழ்ந்த மக்கள் எப்படி வசித்தார்கள் என்பதையும் நாம் சற்று கவனித்தால் அவர் வாழ்ந்த காலக் கட்டத்தையும் நாம் அறிந்து கொண்டவர்களாவோம்.

அடர்ந்த மலைகளும், மலைக்குன்றுகளும் தொடர்ந்து சரிந்து கடற்கரை வரை பரவி, சில வளைகுடாக்களை ஏற்படுத்தியிருந்தன. அந்தக் கடற்கரைப் பகுதிகளிலே கிரேக்க நாட்டு மக்கள் குடியேறி இருந்தார்கள். அவர்கள் வாழ்ந்து வந்த இடங்களின் உட்பகுதி யிலே காரியர் என்ற இனத்ததாரும் வாழ்ந்து வந்தார்கள்.

இந்த காரியா இனத்தவர்களைச் சுற்றி வாழ்ந்து கொண்டிருந்த கிரேக்கர்கள், அவர்களை மிக இழிவாக நடத்தி, அடிமைகளாகக் கருதினர். அப்போது அந்த நாடு அரசர்களாலும் அரசிகளாலும் ஆளப்பட்டு வந்தது. அந்த அரச பரம்பரையினர். ஹராடெடஸ் பிறந்த ஊரான ஹலிகார்ன சகில் என்ற இடத்தையே தங்களது இருப்பிடமாக நிறுவிக் கொண்டார்கள். அவர்களுள் சிலர் மேன் மக்களாகவும் - மேதைகளாகவும், கல்விமான்களாகவும் வாழ்ந்தனர்! வேறு சிலர், லிடியர்களுடனும் பாரசிகத்தினர் களுடனும் சேர்ந்து போரில் திறமை பெற்று வாழ்ந்தார்கள்.

இத்தகைய காரியர் இனமக்களுள், ஹிராடெடஸ் கல்வி யாளர்களது பிரிவினர் பரம்பரையிலே பிறந்தவர் ஆவார். அப்போது, ஒரு காரியப் பெண்ணரசி, ஆட்சி செய்து வந்தாள். அவள் பெயர் அர்டி மசியா என்பதாகும். அவள், பாரசீகப் போரில் மன்னர் செர்க்சிசுக்குப் படைப்பலம் உதவிசெய்தவள். அந்தப் போரில், அந்த மன்னரிடம் - இருபத்தாறு லட்சத்து நாற்பத் தோராயிரம் படைவீரர்கள் இருந்ததாக ஹிராடெடஸ் தனது வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்.

மன்னன் செர்க்சிஸ் பிறகு இருபதாண்டு காலம் ஆட்சி செய்து கி.மு. 465 ஆம் ஆண்டின் போது அர்டபான்ஸ் என்ற படைத் தளபதியால் படுகொலை செய்யப்பட்டார் என்று அவர் கூறுகிறார். காரியர் இனப் பெண்ணரசி அர்டிமிசியாவின் பதினான்கு ஆண்டுக்கால ஆட்சிக்குப் பிறகு, அவளது பேரன் லிக்டமிஸ் கொடுங்கோலாட்சி செய்தவந்தான். அப்போது, அந்த நாட்டில் இரண்டு பிரிவினர் இருந்தனர். அவர்களுள் ஒரு பிரிவு கொடுங்கோலன் ஆட்சியை ஒழிப்பது என்றும், மற்றப் பிரிவினர் அடிமையாகவே வாழ்ந்து சாகலாம் என்ற முடிவிலும் இருந்தார்கள்.

கொடுங்கோல் அரசனை ஒழிக்கும் புரட்சிக் குழுவுக்கு ஹிராடெடஸ் தாய்மாமனும், சிறந்த கவிஞருமான பான்யாசிஸ்

தலைமை வகித்தார். மன்னன் அக்கவிஞரைக் கைது செய்து தூக்கிலிட்டுக் கொன்றான். இந்தப் பயங்கர நிகழ்ச்சியைக் கண்ட ஹிராடெடஸ் - சாமோஸ் என்ற தீவுக்கு ஓடிவிட்டார்.

அந்த தீவிலே அவர் தங்கியிருந்த எட்டாண்டுகளில் அத்தீவின் அயோனிய மொழியைக் கற்றுக் கொண்டார். அந்த மொழியிலே தான் ஹிராடெடஸ் தனது வரலாற்று நூலை எழுதினார். கொடுங்கோலன் பதவி நீக்கம் செய்யப்பட்டதை அறிந்து, மீண்டும் அவர் தனது பிறந்த ஊரான ஹாலிகார்னஸ்க்கே திரும்பினார்.

சொந்த ஊர் திரும்பிய அவர், பதவி நீக்கம் செய்யப்பட்ட வனுக்குப் பதிலாகப் பதவியேற்றவனும் கொடுங்கோலனாக ஆட்சி செய்ததைக் கண்டார். எனவே தனது சொந்த அனுபவங் களுக்காக பல ஊர்களையும், நகரங்களையும், நாடுகளையும் சுற்றி, ஆப்பிரிக்கா, ஐரோப்பா போன்ற கண்டங்களுக்குச் சென்று ஆங்காங்கே உள்ள மக்கள் வாழ்க்கை முறைகளைக் கண்டறியப் புறப்பட்டார்.

அந்த நேரத்தில் கிரேக்க நாட்டின் ஒரு பகுதியான ஏதென்ஸ் சிறப்பான புகழைப் பெற்று, உலக நாடுகளில் பெருமை அடைந்த நகரங்களில் ஒன்றாக விளங்கியது. அதனால், ஹிராடெடஸ் ஏதென்ஸ் நகரையே தனது சொந்த ஊராகக் கருதி அங்கேயே தங்கி வாழ்ந்தார்.

கிரேக்கத்தின் மாபெரும் நாடகப் பேராசிரியர்களுள் ஒருவரான, தத்துவ மேதை சோபாக்கிளிஸ் என்பவர் அவருக்கு நண்பரானார். இவர் கி.மு. 495க்கும் 406 ஆம் ஆண்டிற்குமிடையே வாழ்ந்தவர். சோபாக்கிளிஸ் ஹிராடெடஸ் மீது கவிதை பாடுமளவுக்கு மிக நெருங்கியவரானார். ஹிராடெடஸ், சோபக்ளிஸ் போன்றவர்களது சிந்தனைகளால் ஏதென்ஸ் மேலும் பெரும் புகழைப் பெற்றது.

உலகப் பண்பாட்டின் சிறந்த நகரங்களுள் ஒன்றாக விளங்கிய ஏதென்ஸ் நகரத்து வீதிகள் கூடுகின்ற சந்திப்புக்களில், ஹிராடெடஸ் தான் எழுதிய 'வரலாறுகள்' என்ற நூலை மக்கட் கூட்டத்தி னிடையே படித்துக் காண்பித்தார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள் அனைவரும் தங்களது கையொலிகளை எழுப்பி மகிழ்ச்சியோடு அதனை வரவேற்றார்கள். ஏதென்ஸ் நகரத்தின் பொது நிதியிலே இருந்து அவருக்குப் பத்து டேலண்டுகள் TAL-ENTS, அதாவது 2400 பவுன்களைப் பரிசாக அளித்து மகிழ்ந்தார்கள்.

ஏதென்ஸ் நகரத்து மக்களில் வேறு ஒரு பிரிவினர், ஹிராடெடசின் 'வரலாறுகள்' நூலினது கருத்துக்களைக் கேட்டுக் கையொலி எழுப்பியது மட்டுமல்லாமல், அந்த நூலின் வாசகங்களைத் திரட்டி அந்த நகரிலே நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுகளில் மகிழ்ச்சிப் பொங்கிட ஓதினார்கள் என்றும் வரலாற்றுச் சம்பவங்கள் கூறுகின்றன.

ஏதென்ஸ் நகரத்திலேயே அவர் தொடர்ந்து தங்கிவிடாமல், மேலும் பல சரித்திரச் சம்பங்களைத் தொடர்ந்து திரட்டிட, ஹிராடெடஸ் அங்கிருந்து உலகின் பல இடங்களுக்குப் பயணம் செய்தார்! ஆங்காங்கு தான் கண்ட சம்பவங்களையும் சேகரித்து வந்தார்.

இன்றைய ஆப்பிரிக்கா கண்டத்திற்கு அவர் வந்த காலத்தில் நைல் நதி நாகரிகங்களை எல்லாம் அறிந்து கொண்டு, வட எகிப்து நாடு வரை சென்றார். அதே பயணத்தின் போது, ஆசியா, பாபிலோன், சூசா, எக்படன போன்ற நகர்களுக்கும் சென்று வரலாறுகளைத் திரட்டினார். கருங்கடல், பகுதிகளையும், டான்யூப் நதி டெல்டா பகுதி மக்களையும் சந்தித்த பின்பு, கிரிமியா, கோல்கே, புது ஜார்ஜியா, மாநிலங்களுக்கும் சென்றார். சிரியா, திரேசியன், சைரினில், லிபியா, எபிரஸ், திசாவியா, அட்டிகா, பெலபோனீசயா போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்று, அந்தந்த நாடுகளின்

உட்பகுதிகளிலே புகுந்து, அங்கங்கே வாழ்கின்ற மக்களை எல்லாம் சந்தித்து, ஒரு வரலாறு எழுதப்படுவதற்கான காரண, காரியங்களை எல்லாம் கேட்டறிந்து, தக்க குறிப்புக்களை எடுத்துக் கொண்டும் அவற்றைத் தனது மனத்திலே பதித்துக் கொண்டும் வரலாறுகளைத் திரட்டி பல அரிய செயல்களைச் செய்தார்!

இவ்வாறு, உலகைச் சுற்றி ஒரு வரலாற்றை எழுதிட செயற்கரிய செயல்களைச் செய்த முதல் வரலாற்று ஆசிரியர் ஹிராடெடஸ்தான் என்றால், அவர் அந்த நூலை எழுதிட எவ்வளவு அக்கறையோடு அரும்பாடுபட்டிருக்கிறார் என்பதை இன்றும் நாம் எண்ணும் போது உடல் சிலிர்க்கின்றது.

அவர் மக்களிடம் கேட்ட செய்திகளையும்,தான் பார்த்த உண்மைகளையும், மக்களால் கூறப்பட்ட சிறு சிறு கதைக் குறிப்புகளையும், மன்னர்களது வாழ்வில் நடந்த சம்பவங் களையும், நன்கு விசாரணை செய்து, இவற்றை எல்லாம் சேகரித்து, அவற்றுக்கு ஓர் உருவம் கொடுத்த பின்பே - தனது 'வரலாறுகள்' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

ஏதன்ஸ் நகர மக்கள் ஒன்று திரண்டு கி.மு. 444 ஆம் ஆண்டின் போது இத்தாலி நாட்டின் தென்பகுதியில் ஒரு குடியேற்றத்தை அமைத்துக் கொண்டு, அதற்குத் 'தூரிக்' என்று பெயர் வைத்துக் கொண்டனர். அந்தக் குடியேற்ற மக்களில் லைசியர், சைரக்கியூஸ் நாடுகளைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். லைசியர்கள் இடையே அப்போது லைசியாஸ் என்ற ஒரு சிறந்த பேச்சாளரும் இருந்தார். இவருக்கும் ஹிராடெடசுக்கும் நட்பு ஏற்பட்டதால் ஹிராடெடசும் அந்தக் குடியேற்ற மக்களிடையிலேயே தனது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு அவர்களுடனேயே வாழ்ந்தார்.

அந்தப் பகுதியிலே அவர் ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் தொடர்ந்து வாழ்ந்தபின்பு, தான் எழுதியவற்றை எல்லாம் ஒன்பது நூல்களாகத் தொகுத்தார்.

கி.மு. 414 ஆம் ஆண்டு வரை அங்கே வாழ்ந்த பின்பு, மீண்டும் வரலாற்றுச் செய்திகளைச் சேகரிக்கப் புதிய பயணத்தை மேற்கொண்டார். இறுதியில் அவர் தனது நூலை முடிக்க முடியாமலேயே கி.மு.408 ஆம் ஆண்டில் மீண்டும் ஏதென்ஸ் நகர் வந்தபோது, தனது 76 ஆம் வயதில் இறந்தார்.

## 3. தமிழர் புகழ்

'வரலாற்றின் ஆதித் தந்தை' என்று, உலகப் பெரு நாவலர் சிசிரோ என்பவரால் ஹிராடெடஸ் பாராட்டிப் போற்றப்பட்டவர். வரலாறு எப்படி எழுதப்பட வேண்டும் என்பதற்கு முதல் வழி காட்டியாக விளங்கியவர் அவர் வரலாற்றின் ஆதித் தந்தையாக மட்டும் சிறந்தவர் அல்லர்; ஐரோப்பிய உரைநடையின் ஆதித் தந்தையாகவும் திகழ்ந்தவர்.

நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ் நாட்டிலே இருந்து படகேறிச் சென்ற தமிழர்களே பினீசியர் என்ற நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை ஹிராடெடஸ் தனது 'வரலாறுகள்' என்ற நூலிலே குறிப்பிட்டு, தமிழ் மக்களுக்கும் - பண்பாடுகளுக்கும் -பழக்க வழக்கங்களுக்கும் - பெருமை தேடித் தந்தார்.

படகு ஏறிக் கடல் கடந்து சென்று, பினீசியா நாட்டிலே தங்கி வாழ்ந்து, பனைமரத் தொழில்களை அங்கே, பயிரிட்டுச் செய்து வந்ததால், அவர்கள் பாமேசியர் என்று அழைக்கப்பட்டார்கள் என்றும், அந்தப் பாமேசியர்கள் தான் நாளடைவில் பினீசியர்கள் என்று உலக நாட்டவரால் குறிப்பிடப்பட்டவர்கள் என்றும் ஹிராடெடஸ் தனது 'வரலாறுகள்' என்ற நூலிலே எழுதியுள்ளார்.

எனவே, நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டுக்கு ஒரு வரலாறு இல்லை என்ற நிலையை மறுத்து, "4000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டிலே இருந்து புறப்பட்டு, கடல்வழியாக உலகின் பல பகுதிகளுக்கும் சென்று,

குடியேற்றங்களை தமிழர்கள் அமைத்தனர் என்பதையும், அந்த மக்கள் தான் பாமேசியர் என்றும், அப் பாமேசியர்களே பினீசியர்களாக வரலாற்றில் பெயர் ஏற்று வாழ்ந்து வந்தவர்கள் என்றும் ஹிராடெடஸ் தனது 'வரலாறுகள்' என்ற புத்தகத்திலே குறிப்பிட்டு, தமிழ் மக்களுக்கும் ஒரு வரலாறு உண்டு என்பதை நிரூபித்தவர் ஹிராடெடஸ். இந்த வரலாற்றுச் சம்பவத்திற்கு அஸ்ஸீரிய நாட்டிலே உள்ள கல்வெட்டுகள் ஆதாரமாக இன்றும் இருக்கின்றன.

அஸ்ஸீரிய நாட்டுக் கல்வெட்டு மட்டுமல்ல தமிழர் தான் பினீசியர் என்பதற்குரிய சான்று, பினீசியர் மக்கள் இடையே உள்ள தமிழரது பழக்க வழக்கங்களையும், தமிழ்ப் பண்பாடுகளையும் அவர் சுட்டிக் காட்டி பெரும் பெருமையையும் நமக்கு உருவாக்கி இருக்கிறார்.

அதுமட்டுமன்று, பாரசீக மன்னர்களுள் ஒருவன் அஸ்டியகெஸ். அவனது நம்பிக்கையாளன் ஹார்பகஸ் அரசுப் பணிகளில் தன்னை ஏமாற்றி வாக்கு மோசடி செய்து விட்டான் என்று எண்ணி, ஹார்பகசின் பதின்மூன்று வயது சிறுவனைக் கொன்று பெற்ற தகப்பனான ஹார்பகசுக்கே அந்த அரசன் அஸ்டியகெஸ் பிள்ளைக் கறியமுது விருந்து வைத்தான்.

இந்தச் சம்பவத்தை ஹிராடெடஸ் தனது வரலாற்றில் எழுதியுள்ளதானது. தமிழ்நாட்டில், கி.பி 1113, 1150 ஆம் ஆண்டுவரை அரசாண்ட இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆட்சியில் அமைச்சராக இருந்த சேக்கிழார் பெருமானால் எழுதப்பட்ட பெரிய புராணம் என்ற நூலின் சிறுத்தொண்ட நாயனார் - சிவ பெருமானுக்குப் பிள்ளைக் கறியமுது படைத்த வரலாற்றுச் சம்பவத்தையும் நமக்கு நினைவு படுத்துவதாக உள்ளது.

அதுபோலவே, இந்திய நாட்டின் மற்றொரு சம்பவத்தையும் அவரது நூல் நமக்கு நினைவுறுத்துகிறது. அதாவது வராகமிகிரர்

என்பவர் கி.பி. 507 - 587ஆம் ஆண்டில் குப்த சாம்ராச்சியத்தில். ஜோதிட வித்தகராக வாழ்ந்து வந்தார். அவர் எழுதியது 'பிருகத் சம்ஹிதை' எனும் சோதிட நூல். வராகமிகிரர் மன்னனது அவையில் 'ராஜகுமாரனுக்குப் பன்றியினால் மரணம் ஏற்படும்' என்றார். உடனே மன்னன் ஒரு தீவில் அரண்மனை கட்டி, அதிலே ராஜகுமாரனைப் பாதுகாப்போடு வைத்துக் காப்பாற்றியும் கூட, சோதிட நிபுணர் குறிப்பிட்ட நாளன்று, அரண்மனைச் சுவரின் மீது மாட்டப்பட்டிருந்த களி மண்ணால் செய்த பன்றி உருவை பல்லி அசைத்து, அது குழந்தை தலையிலே விழுந்ததால் குழந்தை மாண்டு விட்டது. இது கற்பனைக் கதைதான் என்றாலும், கிரேக்க நாட்டில் இதுபோன்ற ஒரு கதை இருந்ததை ஹிராடெடஸ் நமக்கு நினைவூட்டுகிறார்.

ஹிராடெடஸ் எழுதிய 'வரலாறுகள்' என்ற நூலில் மேற்கண்ட புராணக் கதைகள், நாடோடிப் பாடல்கள், நீதிக் கதைகள், அந்தக் காலத்தின் அறிவியல் கோட்பாடுகள், ஊர்வம்புகள், திண்ணைப் பேச்சுக்கள், புதிய நவீன கதைகள் ஆகியனவெல்லாம் இடம் பெற்றுள்ளன.

இதனால், ஹிராடெடசை ஒரு நேர்மையான வரலாற்று ஆசிரியர் அல்லர் என்று சொல்பவர்களும் அப்போது இருந்தார்கள். ஆனால், அவர் எழுதியுள்ள மேற்கண்ட சம்பவங்களின் உள்ளே புகுந்து உற்று நோக்கிச் சிந்திக்கும் போது, ஹிராடெடஸ் கூறியவை எல்லாம் உலக நாடுகளிலே எங்கெங்கோ நடைபெற்ற சம்பவங்களாக இருக்கின்றன. அதனால் அவர்மீது சிலர் கூறிய குற்றச் சாட்டுக்கள் எல்லாமே தவிடு பொடியாகின்றன.

எடுத்துக்காட்டாக, ஹிராடெடசை நாடுகடத்தப்பட்ட தளபதி என்று கூறும் ஒரு செய்தியும் உண்டு, ஆனால், அவர் எந்த நாட்டிலும் அரசுப் பதவிகளிலோ அல்லது போர் சம்பந்தப்பட்ட பதவிகளிலோ அல்லது போர்க்கள் நிகழ்ச்சிக் களிலோ பணியாற்றியதாக எந்த விதக் குறிப்பும் கிடைக்கவில்லை.

மாறாக, ஹிராடெடஸ் தனது 'வரலாறுகள்' என்ற அரும் பெரும் நூலை எழுதுவதற்காக உலகத்திலே உள்ள ஊர்களை எல்லாம் சுற்றி நாடோடியாக அலைந்தார்.

ஹிராடெடஸ் தொழில் என்ன தெரியுமா? மக்களைச் சந்திக்கும் போதெல்லாம் அவர்களிடம் கதை கூறுவதுதான்; நமக்குக் கவிதை தொழில் என்று சுப்பிரமணிய பாரதியார் கூறியதைப் போல ஆனால், அவர் கூறும் கதைகளில், உண்மையான மனிதர்களின் வீரச் செயல்களும், அவர் சுற்றி வந்த நாடு நகர, பட்டி தொட்டிகளின் வருணனைகளும், அந்தந்த நாடுகளிலே வாழ்ந்த மக்களின் இனங்களும். அவர்களது வாழ்முறைகளுடன் கூடிய நடை, உடை, பண்பாடுகள், பழக்க வழக்கங்களும் நிறைந்து காணப்படுவதைத் தான் நம்மால் காண முடிகின்றது.

அதனால்தான், அவர்காலத்தில் அதாவது கி.மு.471 - 401 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் வாழ்ந்த கிரேக்க வரலாற்றுப் பேராசிரியரான 'தூசிடைடிஸ்' THUCYDIDES என்பவர், ஹிராடெடைசைப் பற்றிக் கருத்துக் கூறும் போது;

''ஹிராடெடஸ் எப்போதெல்லாம் மக்கட் குழுக்களைப் பார்க்கிறாரோ, அப்பொதெல்லாம் ஏதாவது கதைகளைக் கூறிக் கொண்டே இருப்பார். கதைகளைக் கூறும்போது மக்களுடைய முகங்களை உற்றுப் பார்த்தபடியே பேசுவார். ஏன் தெரியுமா?''

''நாம் கூறும் கதைக்ளைக் கேட்கும் மக்கள் முகமலர்ச்சியுடன் கேட்கிறார்களா? அல்லது முகம் சுளித்துக் கொள்கிறார்களா? கேட்பவர்களுக்கு நாம் கூறும் கதை, களைப்பு, சோர்வுகளைக் கொடுக்கின்றனவா? அல்லது ஆர்வமுடன் கேட்கிறார்களா என்பதை அவர் அறிந்து கொள்ளத்தான் அவர் கதை கூறும் போக்கைக் கடைப்பிடித்தார்.''

''அவர் கூறும் வரலாற்றுச் செய்திகள், கதைகள், எல்லாமே உண்மைகளையே உணர்த்தின. அப்படி ஏதாவது கற்பனைகளைக்

கூறினால், அவற்றைக் கற்பனைகளே என்று பகிரங்கமாகக் கூறிவிடும் பண்பாளர். அவர் புத்தகங்கள் அப்போதே மக்களால் புகழுடன் போற்றப்பட்டன என்பவை மட்டுமன்று, இவை போன்ற வராறுகளைப் போல வேறு வரலாறுகள் ஏதும் அக்காலத்திலே தோன்றவில்லை.'' கிடைக்கவில்லை.

''ஹிராடெடஸ் எழுதிய 'வரலாறுகள்' எல்லாம், உரைநடையில் கதையைப் போலவே இருந்ததால் மக்களில் பலர் மனப்பாடம் செய்தார்கள். அவரைச் சுற்றி வாழும் மக்களின் மனப்பாங்குகளை அவர் நன்றாகவே அறிந்திருந்தார். மூடநம்பிக்கை உடையவர் களாக இருந்தால் - அந்த நம்பிக்கையை அவர் எதிர்க்க மாட்டார்.

ஹிராடெடஸ் கல்விமான்களோடு நெருக்கமாகப் பழகுபவர் மட்டுமல்லர், அவர்கள் இடையேயும் தனக்கிடையேயும் ஓர் அறிவுப் பாலத்தை உருவாக்கிக் கொள்பவர். அதனால், அவருக்குள் இலக்கிய இலக்கண வளம் வளர்ந்தது. அப்போதைய ஏதென்ஸ் நாடும் இவரைப் போன்றவர்களால் இலக்கிய வளம் பெற்றதாகவே இருந்தது. அவர் மிகுந்த நுண்ணறிவுடையவர், நடுநிலையிலே நின்று எந்தச் செய்திகளையும் சேகரிக்கும் வல்லமை ஹிராடெடசிடம் இருந்தது. எதிலும் அவர் அவசரப்படமாட்டார்.

''மனிதர்கள் இடையே எப்போதும் குறைகள் இருந்து கொண்டுதான் இருக்கும், அவனை முழுமையாக்கிடத் தானே நாம் நூல்களை எழுதுகின்றோம் என்ற அடிப்படைச் சிந்தனை ஹிராடெடசிடம் எப்போதும் உண்டு. அவரது நூலும் குறைகளும் நிறைகளும் இருக்கத்தான் செய்கின்றன'' என்று குறிப்பிட்டவர் வரலாற்றாசிரியர் 'தூசிடைடிஸ்' என்பவர்.

ஹிராடெடஸ் வரலாற்று, ஞானியானதால், அவர் நல்ல கதைகளை என்றால், உடனே தனது நூலுக்குள் அடக்கிக்

கொள்வார். அது உண்மையா? இல்லையா என்று பார்க்கமாட்டார். காரணம், நல்லது என்றால் என்ன பொருள்? உண்மையுடன் சேர்ந்து காணப்படும் கொள்கைகள் அல்லவா? என்று நினைப்பவர் அவர்.

அதனால்தான், அவரது 'வரலாறுகள்' என்ற நூலைப் படித்தவர்கள் அவரை வரலாற்றின் ஆதித் தந்தை என்று கூறுகின்றனர். உரைநடையிலே எழுதப்பட்ட முதல் நூல் அவருடைய 'வரலாறுகள்' என்பதினாலே, ஹிராடெடஸ் உரைநடையின் ஆதித் தந்தை என்றும், உலக வரலாற்றால் போற்றப்படுகின்றார்.

இத்துடன் மட்டுமன்று; அவருடைய நூல் மதிப்பு. இந்திய நாட்டிற்குப் பெருமை தேடும் வகையில், பிளினி, பெரிப்ளுஸ், மெகஸ்தனிஸ், காலமி, யுவான்-சு-வாங், பாகியான், இத்-சிங், மார்க்க போலோ, கொலம்பஸ் போன்றவர்கள் எல்லாம் இந்தியாவின் பெருமைகளைப் பேசுவதற்கு முன்பே, நூலாக எழுதுவதற்கு முன்பே, ஹிராடெடஸ் ஒருவர்தான் இந்தியாவைப் பற்றிய பெருமைகளை உலகுக்கு எடுத்துக் கூறி உணர்த்தியும் உள்ளார்!

''இந்திய நாட்டின் வாசனைப் பொருட்கள், ஏற்றிக் கொண்டு சென்ற கலங்கள் எகிப்து நாட்டுச் சடலங்களின் துர்நாற்றத்தைப் போக்கியுள்ளன. அந்த பிணம் பாதுகாக்கும் முறைகளையும், இந்தியாவைப் பற்றிய செய்திகளையும் ஹிராடெடஸ் தனது தொகுப்பு நூல்களிலே குறிப்பிட்டிருக்கிறார்.

சிந்து நதி பற்றிய நாகரிகத்தையும், அந் நதியிலே வாழும் பெரிய பெரிய முதலைகளைப் பற்றி யும், இந்தியாவிலே உள்ள வர்ணாசிரமகுல மரபுகளைப் குறித்தும், இந்தியமக்கள் என்றால் அப்போதைய சிந்து வெளி நாகரிகத் தமிழர்களின் பண்பாடுகள், நாகரிகங்கள், சிலருடைய ஆச்சர்யமான அங்க அமைப்புகள்,

பொன் அகழும் எறும்புகள், பொன் வாணிகம், கருங்கடல், ஹிராக்ளிஸ், குதிரைகள், யானைகள் வியப்பூட்டும் மக்களின் வாழ்க்கை முறைகள் போன்றவற்றை எல்லாம் விரிவாகவே விளக்கி எழுதி இந்திய தீபகற்ப நாட்டிற்குத் தேடித் தந்த பெரும் பெருமை ஹிராடெடஸ் என்ற சரித்திர ஞானியையே சேரும்.

ஹிராடெடஸ் என்ற கிரேக்க மொழிச் சொல், ஹீரோஸ் அதாவது வீரன் என்ற மரபில் - உருவான சொல்லாகும். அந்த வரலாற்று மாவீரன் எழுதிய 'வரலாறுகள்' என்ற நூலிலே உள்ள மற்றச் சுவைகளையும் இனிபார்ப்போம்.

## 4. பினீசியர்களும் - கிரேக்கர்களும்

'வரலாறுகள்' என்ற எனது இந்தப் புத்தகம், வரலாற்றை ஊடுருவி, உண்மைச் செய்திகளை 'ஊன்றிப் பார்த்து நான் கொடுத்த உருவமாகும். இதில் இரண்டு செயல்களைச் செய்ய எண்ணுகிறேன்.

ஒன்று, கடந்த கால வரலாற்று நிகழ்ச்சிகளைப் பாதுகாத்து, எதிர்கால சந்ததிகளின் கவனத்துக்கு அதை எவ்வாறு கொண்டு வருவது. நமது சொந்த நாட்டு மக்கள், ஆசியாக் கண்டத்து மக்கள் ஆகியோரின் வியத்தகு சாதனைகளை ஏடுகளில் எழுதி வைப்பது. மற்றொன்று இனங்கள் எவ்வாறு ஒன்றுக் கொன்று விரோதத்தை வளர்த்துக் கொண்டு, போரில் ஈடுபட்டு அழிந்தன என்பதைக் கூர்மையாக ஆராய்ந்து, அதனதன் நன்மை - தீமைகளை அறிவிப்பது என்பதே இந்த நூலின் நோக்கமாகும்.

இம்மாதிரியான போர்கள், கலகங்கள் உருவாகக் காரண மானவர்கள் பினீசியர்களே - என்று பாரசீக வரலாற்று ஆசிரியர்கள் பினீசிய மக்கள் மீது பழிபோடுகிறார்கள்.

அப்படியானால், யார் இந்த பினீசிய மக்கள்? எங்கிருந்து வந்தார்கள்? அவர்களது ஆதி வரலாறுகள் என்ன? இவற்றை

யெல்லாம் நாம் நோக்கினால், சில உண்மைகளை மக்கள் தெரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும்.

பினீசிய மக்கள் என்று அழைக்கப் படுவோர், முதன் முதலில், பண்டைய காலத்தில், இப்போது கூறப்படும் இந்து மகா சமுத்திரம் என்ற கடற்கரை முனையிலே இருந்து வந்து குடியேறியவர்கள் ஆவர்.

மத்திய தரைக் கடல் வழியாகப் புகுந்து, அங்கு தங்கள் இருப்பிடத்தை அவர்கள் அமைத்துக் கொண்டார்கள். இன்றைக்கும் அம் மக்கள் அங்கே தான் இருக்கிறார்கள் - வாழ்கிறார்கள். அவ்வாறு அவர்கள் ஏன் வந்தார்கள் என்றால், வியாபாரம் தான்! நாட்டுக்கு நாடு வாணிகம் செய்து, திரை கடலோடி திரவியம் தேடுவது அந்த மக்களின் மூதாதையர்களது வழிவழிப் பண்பு. அதனால், தங்களது மரக் கலங்களில் எகிப்திய, அஸ்ஸிரிய நாட்டுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு ஆர்கோஸ் என்பது போன்ற மிகச் சிறந்த பெரிய கடற்கரை நகர்களுக்குச் சொன்றார்கள். அந்த ஆர்ககோஸ் என்ற நாடு, இன்று பொதுவாக ஹெல்லஸ் HELLAS என்ற பெயரால் அழைக்கப் பட்டு வருகிறது.

அவர்கள் ஆர்கோஸ் நகருக்குக் கொண்டு வந்த பொருட்களை எல்லாம் அந்த நகரத்து மக்களது காட்சிக்காகப் பரப்பி வைத்தார்கள். ஆதி காலத்தில், காட்சிப் பொருட்களாக வைக்கப்பட்ட நிலையிலே தான் வணிகம் நடை பெறுவது வழக்கமாகும். அதே போன்றே ஆர்கோஸ் நகர மக்களது வணிகத்துக்காகவும் கொண்டு வந்த பொருட்கள் கடைபரப்பி வைக்கப் பட்டது. அந்தப் பொருட்கள் எல்லாம் சில தினங்களில் விற்கப்பட்டு விடும்.

இந்த கண்காட்சிக்குப் பொருள்களை வாங்குவதற்காக அழகான, பணக்காரர்கள் முதல் சாதாரணமானவர்கள் வரை வந்து கூடுவர். அரசர் ஜனாகஸ் என்பவரின் மகளான அயோ

என்பவளும் தனது குழுவினருடன் வந்தருந்தாள். அந்த நேரத்தில் பெண்களுள் பலர் கப்பலின் பின்புறத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது, பினீசிய மாலுமிகள் ஒருவருக்கு ஒருவர் கண்ணடித்துக் கொண்டு திடீரெனப் பெண்கள் கூட்டத்துள் பாய்ந்தனர்!

பயந்த பாவையர் பலர் ஓடியது போக, இளவரசி அயோவும், அவளுடன் இருந்த சில பெண்களும் மாலுமிகளால் கவரப்பட்டு, கை கால்கள் கட்டப்பட்டு, கப்பலில் ஏற்றப்பட்டு எகிப்து நாட்டிற்குக் கடத்திச் செல்லப்பட்டார்கள்.

அயோ என்ற ஓர் அரசரின் மகள் இப்படித்தான் எகிப்து நாட்டுக்குக் கொண்டு வரப் பட்டாள் என்று பாரசீக வரலாறு கூறுகிறது. இந்த விவரமே படிப்பதற்கும், கேட்பதற்கும் எரிச்சலும், கோபமும் கொந்தளிக்கும் சம்பவமாக உள்ளது. ஆனால், கிரேக்கர்கள் இதை வேறு விதமாகக் கூறுகிறார்கள்.

இந்தச் சம்பவம் நடந்து முடிந்த பிறகு, கிரேக்கர்கள் சிலர், பெரும்பாலும் அவர்கள் கிரீஸ் நாட்டினராகவும் இருக்கலாம். பினீசியக் கடற்கரைகளில் இருந்த 'தீரே' துறை முகத்தில் ஆர்கோஸ் நகரில் பரப்பி வைத்த காட்சிப் பொருள்களைப் போலவே இங்கும் கடை விரித்தார்கள். அப்போது, அந்தக் காட்சிக்கு பொருட்கள் வாங்க வந்த அந்த நாட்டு அரசரின் மகளான யூரோபா என்பவளை வலுக்கட்டாயமாகத் தங்களது கிரேக்க நாட்டிற்குக் கடத்திச் சென்று விட்டார்கள். இப்படிப்பட்ட பெண்கள் கடத்தும் போட்டா போட்டியிலே இரு நாடுகளும் ஈடுபட்டுக் கொண்டன.

கிரேக்கர்கள் மறுபடியும் ஓர் அடாத செயலைச் செய்தார்கள். அதாவது, பாசிஸ் என்ற ஆற்றின் கரைமீது கோலஷிஸ் எனும் நாட்டுத் துறை முகத்தில் இருந்த 'இய' (AEA) என்ற இடத்தில் பொருட்களைச் சந்தையாக்கிட கிரேக்க மக்கள் ஏற்றிச் சென்றார்கள். அங்கே பொருட்களை விற்று அவர்கள் வாணிகம்

நடத்திக் கொண்டிருந்த போது, அந்த நாட்டு அரசரின் மகள் மீடிய MEEDEA என்பவளைக் கடத்திச் சென்று விட்டார்கள்!

கோல்ஷிஸ் மன்னன் இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்து, தனது மகளைத் திருப்பித் தருமாறு கிரேக்கத்துக்குத் தூது அனுப்பினான். ஆர்கோஸ் நாட்டில் 'அயோ' என்பவளைக் கடத்திய போது நாங்கள் நட்ட ஈடு ஏதும் தரவில்லை, என்று கடுமையாகப் பதில் கூறி அனுப்பி விட்டார்கள்.

இந்தக் கடத்தல் சம்பவத்திற்குப் பிறகு ஐம்பதாண்டுகள் உருண்டோடின. 'பிரியம்' என்பவரின் மகனான 'பாரிஸ்', மேலே கூறிய கதைகளைக் கேட்டதும், அது போலவே கிரேக்க நாட்டிலே இருந்து ஹெலன் HELEN என்ற பேரழகியைக் கடத்திச் சென்றிடத் திட்டமிட்டுக் கிரேக்கத் துறைமுகம் ஒன்றை வந்தடைந்தான்.

இரு நாட்டின் இந்த இருவேறு வரலாற்றுச் சம்பவங்களை இங்கே ஹிராடெடஸ் சுட்டிக் காட்டியது ஏன்? அப்போது தான், உண்மையை முதன் முதலாக ஒருவனால் புரிந்து கொள்ள முடியும். வரலாறு என்றால் என்ன? அதற்கு ஹிராடெடஸ் என்ற சரித்திர ஞானி, இயேசு பெருமான் பிறப்பதற்குச் சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பேயே தகுந்த விளக்கத்தை வழங்கியுள்ளார்.

நாம் பிறந்த மண்ணின் ஊர், நாடு ஆகியவற்றின் வரலாற்றுச் செய்திகளையும், அங்குள்ள மக்களது வாழ்க்கை நிலைகளையும், காதல், போர் ஆகியவற்றினால் ஏற்பட்ட அனுபவங்களையும், அவர்களது சாதனைகளையும் என்றும் அழியாதவாறு எழுதி வைக்க வேண்டும்.

இவ்வாறு எழுதி வைக்கப்படும் குறிப்புகளே வரலாறு எனப்படும். ஹிராடெடஸ் வரலாறு என்றால் என்ன என்பதற்கு இவ்வளவு அழகாக விளக்கம் தந்துள்ளது மட்டுமன்று, அதற்குரிய சான்றாக தனது 'வரலாறுகள்' என்ற புத்தகத்தையும் எழுதியுள்ளார்.

பினீசியாவில் வசித்து வந்த மக்களுக்குப் பினீசியர் என்று பெயர். பினீசியா நாடு என்பது எப்பகுதியில் அமைந்துள்ளது? சிரியா நாட்டின் கடற்கரைப் பகுதி தான் பினீசியா. மத்திய தரைக் கடல் பகுதிக்கும், லெபனானுக்கும் இடையிலே அமைந்துள்ள நாடு இது. பினீசியா என்ற பெயர் கிரேக்க மொழிச் சார்புடையது. அந்தக் கிரேக்க ஆதாரம் தமிழ் மொழியின் மூலத்தைக் கொண்டது. எனவே, பினீசியா என்ற சொல், இந்தியத் தமிழ் வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். அதுமட்டுமல்லாமல், பினீசியா சிவந்த, சிகப்பான எனும் பொருள்களை உடையது கிரேக்க மொழியிலே இருந்து பிறந்த ஒரு சொல்லாகும்.

இதற்குரிய சான்று தேவைதானே! அதற்கு சிந்தனையாளரும், வரலாற்றாய் வாளருமான 'பெரிப்ளூஸ்' என்பவரது கருத்து இதோ.

''பினீசியர்கள் சிவந்த பொருள்களை வாணிகம் நடத்திய வர்கள்; குருவிந்தக் கல், சிவந்த ஆடைகள், குங்கிலியம், பெரில் முதலியவை இந்தியாவிலே இருந்து எகிப்து நாட்டுக்கும், மற்ற மேல் நாடுகளுக்கும் தீரோ, சீதோன் துறைமுகங்களிலி லிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.'' என்கிறார் தனது நூலின், அதிகாரம் ஆறில்.

பினீசியர்கள் கடல் வியாபாரத்திலும், கப்பல்களைச் சிறப்பாகச் செலுத்துவதிலும் வல்லவர்கள் என்ற புகழைப் பெற்றவர்கள். பல குடியேற்றங்களை உண்டாக்கியவர்கள். அவர்கள் நாட்டின் துறை முகப்பட்டினங்கள் தீரே, சீதோன் என்பனவாகும்.

பிளினி என்ற யாத்ரிகரும், பழைய விவிலிய நூலில் உள்ள 'தீர்ப்புகள்' பகுதியும், பினீசியர் வரலாற்றுக் குறிப்புகளை வலியுறுத்திப் பேசுகின்றன.

பினீசியர் என்ற பெயருக்கு வேறு ஓர் பொருளும் ஆதாரமும் இருக்கின்றது. ''இந்து மகா சமுத்திரத்தின் தென் முனையிலே

இருந்து, தமிழ் நாட்டிலிருந்து, கேரளக் கடற்கரையிலிருந்து கப்பலோட்டிச் சென்ற பழந்தமிழர்கள், 'பனை மரங்களைத் தாங்கள் சென்ற ஊர்களிலே எல்லாம் பயிரிட்டார்கள். அதன் காரணமாக அவர்களைப் 'பாமேசியர்' என்றும், 'பனேசியர்' என்றும் -இந்தப் பெயரானது நாளடைவில் பினீசியர் என்று பெயரானது. பனையேறியோர் என்றதன் உருவ மரூஉ அதாவது சொல் மரபு வகையில் பினீசியர் என்று அழைக்கப் பட்டார்கள்.

அந்த பனை மரங்கள் ஏறியவர் என்ற சொல்லே - பாமேசியர் என்ற சொல்லே - நாளடைவில் பினீசியர் என்று உருவம் பெற்றது. பனை மரங்களை வளர்த்தவர்கள், பனை மரங்களிலே ஏறுபவர்கள், பனையேறிகள். 'பனை'க்கும் 'பினி'க்கும் எவ்வளவு ஓசை ஒற்றுமை நெருங்கி இருக்கிறது பாருங்கள்!

எனவே, பாமேசியர், பனை ஏறியவர் என்ற சொற்களே - நாளாகவாக, பினீசியர் என்ற உருவத்தைப் பெற்றுள்ளது. இதனால் நமக்குப் புலப்படுவது என்ன வென்றால், பினீசியா மக்கள் தமிழ் நாட்டிலே இருந்து சென்று அங்கே குடியமைப்புக்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்தவர்கள் என்று புரிகிறது.

இந்தக் கருத்துக்கு ஆதாரமாக, A SMALLER CLASSICAL DICTIONARY; PAGE - 405 என்ற நூலில் மேற்கண்ட கருத்துக்கள் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

எகிப்து நாட்டு வரலாற்றில் பினீசியாவைப் பற்றி வேறோர் கருத்துக் கூறப்பட்டுள்ளது. அக்கருத்து இது:

''எகிப்தியர்கள் கப்பல் கட்டுவதற்காகக் கி.மு. 3200 ஆம் ஆண்டின் போது, பினீசியாவிற்குத் தேவதாரு CEDAR மரங்களை வாங்கி வர ஒரு தூதுக்குழுவை அனுப்பினார்கள். அதற்குப் பிறகு கி.மு. 1500 ஆம் ஆண்டில் அப்போது அரசியாக இருந்தவளான 'ஹட்ஷிப்சட்' என்பவள், நைல் நதி வழியாகத் தீபே நகரத்திலிருந்து செங்கடலுக்குச் சில கப்பல்களைச் செலுத்தினாள்.

'சாலமோன் என்ற மாமன்னன், சீதோனின் அரசனாக இருந்த ஹீராம் என்பவரிடம் தான் கட்டிமுடிக்க இருக்கும் கோயில் களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் கொண்டு வந்து சேர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.'

ஹீராம் என்பவரும். இந்தியாவிலுள்ள 'ஓபிர்' துறைமுகத்துக்கு வந்து, என்னென்ன பொருட்கள் கோயில் கட்ட தேவையோ 'அவற்றை எல்லாம் வாங்கிச் சென்றார். நாளடைவில், பினீசியர்களே தங்களது கப்பல்களில் அப்பொருட்களை ஏற்றிச் சென்றார்கள்.''

''இந்தியாவில் உள்ள ஓபிர் துறை முகத்துக்கும் சீதோன் நாட்டுக்கும் உள்ள கடல் மார்க்கக் கப்பல் வழி பினீசியர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது. அதை அவர்கள் வியாபார ரகசியமாகத் தெரிந்திருந்தார்கள்.'' என்று, "THEY ALL DISCO VERED AMERICA : PAGES 524 - 526" என்ற புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இதனால் நமக்குப் புரிவது என்ன? பினீசியர்கள் கி.மு. 3000 ஆம் ஆண்டுக் காலத்திலேயே, தமிழ் நாட்டிலே இருந்து கடல் வழியாகச் சென்று, பனை, தென்னை மரங்களைத் தாங்கள் இருந்த இடத்திலே பயிரிட்டார்கள் என்றும், அதற்குப் பிறகு அவர்களைத் தொடர்ந்து தமிழர்கள் பலர் அங்கே குடியமைப்புகளை நிறுவி வாழ்ந்து வந்தார்கள் என்பதும் திட்டவட்டமாகத் தெரிகிறது அல்லவா?

மேற்கண்ட கருத்து உண்மைதான் என்பதை அழுத்தந் திருத்தமாக வலியுறுத்தும் நோக்கத்தில், நமது இந்திய முன்னாள் குடியரசுத் தலைவரும், உலக மக்களால் போற்றப்படும் தத்துவ ஞானியுமான டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன், "OUR HERITAGE" என்ற நூலில் 22 -ம் பக்கத்தில், "The influence of Indian culture has been felt abroad since the 4th Century B.C. Possibly earlier, possibly Later." என்று குறிப்பிட்டுள்ளார்.

“இயேசு பெருமான் தோன்றுவதற்கு முன்பே, கி.மு. நான்காம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளில் இந்தியப் பண்பாடு அறிமுகமாகி வளர்ந்திருந்தது,” என்கிறார்.

எனவே, கி.மு. 16 ஆம் நூற்றாண்டளவில், பினீசியர்களின் முக்கியத் துறைமுகம் தீரே என்பதும், பினீசிய நாடு வலிமை பெற்ற நாடாக இருந்தது என்றும், எகிப்தியர்களால் அந்த நாடு பிடிக்கப் பட்டது என்றும், கி.மு. 6 ஆம் நூற்றாண்டு வாக்கில் அந்த நாடு தமிழ் நாட்டுத் துறைமுகங்களுடன் வியாபாரம் நடத்தியது என்றும். பழைய பைபிள் நூலில் இந்தக் குறிப்புக்கள் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன என்றும், அதே நேரத்தில் அஸ்ஸீரிய நாட்டின் கல்வெட்டுக்களிலும் பொறிக்கப்பட்டிருக்கிறது என்பது போன்ற பல செய்திகள் நமக்குத் தெரிகின்றன.

Alexander, the great என்று கூறப்படும் மகா அலெக்சாந்தர் அரசாண்ட கி.மு. 356 - 323 ஆம் ஆண்டுகளில் பினீசியா அலெக்சாண்டர் ஆட்சியுடன் இணைக்கப் பட்டது. அதற்குப் பிறகு, கி.மு. 197 ஆம் ஆண்டில் அரசாண்ட செலூசிட் அரசுடன் அது மீண்டும் இணைக்கப்பட்டது. அதற்குப் பிறகு கி.மு. 64 ஆம் ஆண்டில் அரசாண்ட பாம்பே என்பவரால் ரோமானியப் பேரரசுடன் சேர்க்கப் பட்டுவிட்டது.

இவ்விதமான இணைப்புக்களுக்குப் பிறகு, ரோமப் பேரரசுக்கு அது வரிகட்டி வாணிகம் செய்து வந்தது. பாம்பே என்ற அந்த அரசன் இறந்த பின்பு அதாவது கி.மு. 48 ஆம் ஆண்டில் பினீசியா என்ற நாடே மறைந்து விட்டதால் அதன் பெயரும் அழிந்து போய், அந்த செம்மையான மொழியும் அழிந்து விட்டது. இதற்கெல்லாம் என்ன காரணம்?

பீனிசியாவில் அடிக்கடி நடந்து வந்த அரசுப் போர்களும், அதனால் அந்நாடு தனது பிறப்புரிமையான சுதந்திரத்தை இழந்ததுமே ஆகும்.

# 5. தமிழர்களின் கடற்பயணம்

தமிழ் நாட்டில் வாழ்ந்த பண்டைய தமிழர்கள், தமிழ் நாட்டிலே இருந்து கடல் மார்க்கமாக, மரக்கலங்கள் மூலமாக செங்கடல் வழியாகச் சென்றார்கள். பிறகு அங்கிருந்து கால் நடையாக நடந்து, சீதோன், தீரே ஆசிய துறைமுகங்களை அடைந்தார்கள். இவர்கள் இவ்வாறு வணிகப் பயணம் சென்ற ஆண்டு கி.மு. 3000 ஆகும். அதாவது இயேசு பெருமான் பிறப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே ஆகும் என்பது குறிப்பிடத்தக்க சான்றாகும்.

மேற்கண்டவாறு போலவே, மற்றொரு வணிகப் பயணத்தையும் பழந்தமிழர்கள் மேற்கொண்டிருந்தார்கள். அதாவது, பாரிகா சாவிலே இருந்து கடற் பயணம் துவங்கிக் கடற்கரை ஓரமாகவே சென்று, செங்கடல் வழியாக, தீரே, சீதோன் துறைமுகங்கள் போய் சேர்ந்தார்கள். இந்தக் காலம், கி.மு. 2500 ஆம் ஆண்டளவினதாகும்.

# 6. உலகின் பல பகுதிகளில் தமிழர் குடியேற்றங்கள்!

## பினீசியர்களின் கடற்பயணம்

தமிழ் நாட்டிலே இருந்து மரக்கலங்கள் வழியாகப் பினீசியா சென்று குடியேறிய பினீசியத் தமிழ்ப் பெருமக்களது பினீசியா நாடு, கி.மு. 356 - முதல் 323 ஆம் ஆண்டின் போது, மகா அலெக்சாந்தர் என்ற மாமன்னனால் ரோமப் பேரரசுடன் சேர்க்கப்பட்டு, பிறகு ஆண்டுகள். ஆக ஆக, கி.மு. 48 ஆம் ஆண்டில் அந்தத் தமிழரது குடியேற்ற நாடு அழிந்தே போயிற்று. அத் தமிழர்களுடைய நாட்டின் பெயரும், அவர்கள் பேசிய மொழியும், சாம்ராச்சிய ஆதிக்கம் என்ற பூகம்பத்திலே புதைந்து போன விவரங்களை இதுவரை பார்த்தோம்.

அவ்வாறு அழிந்து போன பினீசியர் மக்கள் சிறுகச் சிறுக உலகின் பல பகுதிகளுக்குச் சென்று குடியேறிய விவரத்தை இனி மேற்கொண்டு காண்போம்.

1. பினீசியத் தமிழ்ப் பெருமக்கள், சீதோன், தீரே என்ற துறைமுகப் பட்டினங்களில் இருந்து இங்கிலாந்து நாட்டைச் சுற்றி, ஐஸ்லாந்து நாட்டை அடைந்து, பிறகு அங்கிருந்து வட அமெரிக்காவின் கிழக்குக் கரையிலுள்ள வடசேலம் எனும் துறைமுகத்திற்கு கி.மு. 800 ஆம் ஆண்டளவில் போய் சேர்ந்தார்கள். இது ஒரு கடல் மார்க்கமாகும்.

2. இரண்டாவது கடல் பாதையாக, அவர்கள் சீதோன், தீரே என்ற துறை முகங்களை விட்டுப் புறப்பட்டு, நேர்வழியாக வடசேலம் சென்று அடைந்த ஆண்டு கி.மு. 500 ஆகும்.

3. அதே சீதோன், தீரே துறைமுக நகர்களை விட்டுப் புறப்பட்ட வேறு பிரிவினர், நேர்வழியில் மெகானிஸ் பர்க் என்ற துறைமுகத்திற்கு கி.மு. 300 ஆம் ஆண்டிலே போய் சேர்ந்தார்கள்.

4. அதே சீதோன், தீரே துறைமுகப் பட்டினத்தை விட்டுப் புறப்பட்ட மற்றோர் பிரிவினர், கி.மு. 150 ஆம் ஆண்டில் தென் அமெரிக்காவிலே உள்ள அமேசான் என்ற நதியின் கழிமுகத்தை அடைந்தார்கள்.

5. அதே சீதோன், தீரே நகர்களை விட்டு அகன்ற இன்னொரு பிரிவினர், ஆப்பிரிக்கா கண்டப் பகுதியைச் சுற்றிக் கொண்டு, செங்கடல் வரை வந்து, பிறகு, அங்கிருந்து நேரே கி.மு. 1800 ஆம் ஆண்டில் மீண்டும் தமிழ் நாட்டிற்கே வந்து சேர்ந்தார்கள்.

இவ்வாறு பினீசிய தமிழ் மக்கள், ஐந்து பெரும் கடல் மார்க்கப் பாதைகள் வழியாக உலகின் பல பகுதியிலே குடியேறியதுடன், அவர்களுள் ஒரு பிரிவினர் மீண்டும் தமிழ் நாட்டிற்கே வந்தடைந்து விட்டார்கள்.

அமெரிக்கக் கண்டத்தை முதன் முதலில் வெபூஸ்கி என்பவரும், பிறகு இரண்டாவதாக கொலம்பசும் கண்டு பிடித்ததாக, இன்று உலகம் பெருமை பேசுகிறது. ஆனால், பினீசிய தமிழர்கள் வட அமெரிக்காவை கி.மு. 800 ஆம் ஆண்டிலேயே கண்டுபிடித்துக் குடியேறிவிட்டார்கள். அது மட்டு மன்று தென் அமெரிக்கா அமேசான் நதிக் கழிமுகப் பகுதியை அவர்கள், கி.மு.150 ஆம் ஆண்டிலே கண்டு பிடித்து அங்கேயும் தமிழர்கள் குடியேறி இருக்கிறார்கள் என்று ஹிராடெடஸ் வரலாறுகள் கூறுகிறது என்றால், அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர்கள் யார்? தமிழர்கள் அல்லவா? இந்தச் சம்பத்தை உலக வரலாறு திரையிட்டு மூடி மறைத்துவிட்டது ஏன்? என்ற கேள்வி எழுவது இயற்கைதானே?

## தமிழர்களின் அமெரிக்கா

தமிழ் நாட்டிலிருந்து தமிழர்கள் கி.மு. 2500 ஆம் ஆண்டுகளளவில் புறப்பட்டு, அவர்களுள் ஒரு பிரிவினர் கால் நடை வழியாக நிலமார்க்கமாகவும், மற்றொரு குழுவினர் மரக்கலங்கள் மூலமாகக் கடல் வழியாகவும் சென்றார்கள்.

பிறகு இந்த இருபிரிவினர்களும் காம்செட்கா என்ற நகரில் இணைந்து, அங்கே இருந்து கால் நடையாக நடந்து சைபீரிய சமவெளியின் இறுதி முனையிலே உள்ள பேரிங் கடற்கால் வழியாக, வட அமெரிக்காவின் நுழைவாயிலாகவுள்ள அலாஸ்கா தீபகற்பத்தை அடைந்தார்கள். அதற்குப் பிறகு அந்த பூமியின் தட்ப வெட்ப நிலைகளுக்கேற்ற வாறு ஆங்காங்கே குடியேற்றக் கூடாரங்களை அமைத்துக் கொண்டு வட அமெரிக்காவின் இறுதி முனையிலே உள்ள, தென் அமெரிக்காவின் நுழைவாயிலாக அமைந்த மெக்சிகோ நாடு வரை குடியேற்றங்களை நிறுவி வாழ்ந்துள்ளார்கள் என்று, ஹிராடெடஸ் 'வரலாறு' கூறுகின்றது.

## தமிழர்களின் மும்முனைக் குடியேற்றங்கள்!

பினீசியர்கள் தமிழ் நாட்டிற்கு கி.மு. 3000 ஆம் ஆண்டில் வந்த பிறகு, மீண்டும் மூன்று பிரிவினர்கள் தமிழ் நாட்டிலே இருந்த மூன்று மார்க்கங்களில், உலகின் பல பகுதிகளுக்குச் சென்று குடியேறி இருக்கிறார்கள். அவை எவை:

1. தமிழர்கள் அராபிக் கடல் வழியாக, மத்திய தரைக் கடல் பகுதிக்குச் சென்றார்கள். அங்கே இருந்து புறப்பட்டு சீதோன், தீரே துறைமுகங்களை கி.மு. 3000 ஆம் ஆண்டளவில் உருவாக்கினார்கள்.

2. தமிழ் நாட்டிலிருந்து கி.மு. 2500 ஆம் ஆண்டளவில் மற்றொரு பிரிவினர் புறப்பட்டு, கிழக்கு இந்தியத் தீவுகளை அடைந்து, அங்கே இருந்து சீன நாட்டுக்குச் சென்றடைந்து, அதன் பின்னர் பேரிங் ஜல சந்தி வழியாகஅலாஸ்கா நிலப்பகுதிக்குச் சென்று, முப்பது மைல் தூரம் அங்கிருந்து பனிப் பாறையில் நடந்து, அங்கிருந்து வட அமெரிக்க மேற்குக் கடற்கரை ஓரமாச் சென்று, வட அமெரிக்காவின் பல இடங்களிலே மெக்சிகோ வரை சென்று குடியேறினார்கள். அதற்குப் பிறகு அமெரிக்காவில் தாங்கள் சென்று வாழ்ந்தோம் என்பதற்கு அடையாளமாக, அமெரிக்கா சென்ற தமிழர்கள் ஒரு கல்வெட்டு சாசனத்தைச் செதுக்கி அங்கே நாட்டினார்கள்.

இந்தியப் பிரதமர் நேரு பெருமகனார் 1962 ஆம் ஆண்டு வாக்கில் புதுச்சேரி சென்று இந்தோ பிரெஞ்சு, தமிழ் பண்பாட்டு மையத்தைப் பார்வையிட்ட போது, தஞ்சைக்கு அடுத்த பள்ளியகரம் நகரைச் சேர்ந்த பெரும் புலவர். பண்டித நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள் புதுவை மொழி மைய்யத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றிய போது, பிரதமர் நேரு அவரைப் பார்த்து, 'நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டதற்கு, பிள்ளை பதில் கூறும் நேரத்தில்,

''உலகத்தின் ஒரே ஆதி முதல் மொழியாக இருந்து, பிறகு சிலரால் இரண்டு மொழிகளுள் ஒன்றாக்கப்பட்டு, இப்போது உங்களுடையஆட்சியிலே பதினான்கு மொழிகளுள் ஒன்றாக ஆக்கப்பட்டிருக்கும் எனது தாய்த் தமிழ் மொழியை ஆராய்ந்து, ''பிரெஞ்சி - தமிழ் அகராதி'' தயார் செய்து கொண்டிருக்கிறேன்''

-தமிழ்தான் உலக ஆதித் தாய் மொழி என்று பண்டித நேரு முகத்துக்கு முன்பு செம்மாந்து முழக்கமிட்ட அந்த பிள்ளைப் பெரு மகனார் கருத்து உண்மைதான் என்பதற்குரிய சான்று, குறிப்பாக, அமெரிக்காவில் இன்றைக்கு 3600 ஆம் ஆண்டு கட்கு முன்பு பொறிக்கப் பட்டுள்ள கற்சாசனத்தை விட வேறு என்ன தெய்வ சாட்சி வேண்டும்?

அத்தகைய ஒரு தாய் மொழியைப் பெற்று பண்டைய பினீசியத் தமிழ்ப் பெருமக்கள், அமெரிக்கா சென்று கூட, தனது தாய் மொழி மீதுள்ள பற்றும் பாசமும் மறவாமல், நன்றிக் கடனாக ஒரு கற்சாசனம் அமைத்து, உலகமெல்லாம் தமிழ் மொழி பரவ வேண்டும் என்றபாரதியின் ஆணையை அவர்கள் பாரதிக்கு முன்பே நாட்டிவிட்ட பெருமையின் அருமையை நம்மால் மறக்க முடியுமா?

3. தமிழ் நாட்டிலே இருந்த புறப்பட்ட பினீசியத் தம்ழர்கள், மத்திய தரைக் கடலை அடைந்து, பிறகு அங்கிருந்து கிளம்பி இங்கிலாந்து நாட்டைச் சுற்றிச் சென்று, ஐஸ்லாந்து நிலப் பகுதியைச் சேர்ந்து, பிறகு வட அமெரிக்காவின் கீழ்க் கரையில் உள்ள வடசேலம் எனும் பகுதியை அடைந்து அங்கே குடியிருப்புக்களை உருவாக்கிய பின்னர், வட அமெரிக்காவின் பல பகுதிகளிலும் புகுந்து பரவிக் குடியேற்றங்களை நிறுவிக் கொண்டு வாழ்ந்துள்ளார்கள். இந்தக் காலம், கி.மு. 800 ஆம் ஆண்டாகும்.

அடுத்து வரலாற்றுக்கு வருவோம். மத்திய தரைக்கடலிலிருந்து புறப்பட்ட பினீசியர்கள், நேரே மேற்கே சென்று, சிறிது தெற்குப்

பக்கம் திரும்பி, தென் அமெரிக்காவில் - பிரேசில், அமேசான் நதி கழிமுகத்தில் கி.மு. 150 ஆம் ஆண்டளவில் குடியமைப்புகளை நிறுவினார்கள்.

இதுவரை நாம் பார்த்த வரலாற்று விவரங்களை சற்றுக் கூர்ந்து நோக்கும் போது - என்ன முடிவு நமது நமது அறிவுக்கும் சிந்தனைக்கும் புலப்படுகின்றது என்றால், தமிழ்நாட்டின் நாகரிகம் கி.மு. 16 ஆம் நூற்றாண்டளவிலேயே உலகப் புகழின் உச்சியிலே கொடிகட்டிப் பறந்துள்ளது என்பதாகும்.

தமிழர்கள், கடல் மார்க்கமாக, நவரத்னங்கள், வாசனைப் பொருட்கள், சாய வகைகள், துணிவகைகள், உலோக வகைகள், விலங்குகள், பாணம், பாடினியர், விறலியர் போன்றவற்றை தமிழ் நாட்டின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களில் இருந்து ஏற்றிக்கொண்டு அலெக்சாந்திரியா துறைமுகத்துக்கு வாணிகம் செய்துள்ளார்கள். பிறகு, அங்கே இருந்து ரோம் நகரம், மற்ற முக்கிய பட்டினங்களிலும் வியாபாரம் நடத்தினார்கள் என்று வரலாற்று ஞானி ஹிராடெடஸ் கூறுகிறார்.

பினீசியர்களைப் பற்றி அவர் வியப்படைந்து கூறும்போது, பினீசியர்கள் இந்து மகா சமுத்திரம் பகுதியிலே இருந்தும், கேரளக் கடற்கரையிலே இருந்தும், மேற்கே கடல் மார்க்கங்கள் மூலமாகச் சென்று பல குடியேற்றங்களை அமைத்து வாழ்ந்துள்ளார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியானால் ஹிராடெடஸ் கூறுகின்ற கேரளம் எது?

## வால்மீகி கூறும் கேரள நாடு

வால்மீகி இயற்றிய இராமாயணம் நூலில், சோழ நாட்டையும், கேரளத்தோடு கூடிய பாண்டிய நாட்டையும் குறிப்பிடப் பட்டுள்ளது. அந்தக் காலத்தில் கேரளம், பாண்டிய நாட்டுடன் சேர்ந்தே இருந்திருக்கிறது. தமிழ் வரலாறும், சோழர், பாண்டியர், சேரர் என்கின்ற கேரளர்களையும் சேர்த்தே மூவேந்தர்கள் ஆண்ட

நாடு என்று கூறுகிறது. அசோகர் கல்வெட்டும் சோழ பாண்டியர் நாடு என்றே சொல்கின்றது. எனவே, ஹிராடெடஸ் கூறுகிறபடி, கிரேக்க நாட்டில் ஒரு நாகரிகம், எகிப்து நாட்டில் ஒரு நாகரிகம், தமிழர் நாட்டில் ஒரு நாகரிகம், சீன நாட்டில் ஒரு நாகரிகம், இந்த நான்குக்கும் சம்பந்தமில்லாத வடநாட்டு ஆரியர் நாகரிகம் என்ற ஐந்த பெரும் உலக நாகரிகங்களுக்கு இடையே தமிழர் நாகரிகம் நடு நாயகமாய் நின்று; உலக நாகரிகத்தின் தொட்டிலாய் காட்சியளித்துக் கொண்டு - இன்று வரை அழியாமல் வளமோங்கி வாழ்ந்துக் கொண்டிருக்கிறது. இந்த நாகரிகம், கிரேக்க, எகிப்திய, சீன, நாகரிகங்களுக்குரிய ஓர் இணைப்புப் பாலமாய் இருந்து கொண்டிருந்தது எப்போது? கி.மு.3000 ஆம் ஆண்டளவில்!

ஆனால், வடநாட்டிலுள்ள சிந்து வெளி ஹரப்பா - மொகஞ்சதாரோ நாகரிகம், இன்று வரை அகழ்ந்தெடுத்தவரை - ஆராய்ச்சியாளர்கள் கூறம் கருத்து; கி.மு. 1500 ஆம் ஆண்டிலுள்ள தமிழர் நாகரிகம் அதாவது கிராவிடர் நாகரிகம் என்று கூறிவருகின்றனர். இதன் முடிவு, மேலும் அதை அகழ அகழ, ஆராய்ச்சி செய்யச் செய்ய, காலம் மேலும் பழமையாகக் கூடும்.

எனவே, ஹிராடெடஸ் 'வரலாறுகள்' என்ற நூலின் கணிப்புப் படி பார்த்தாலும், ''தென்னிந்தியாவிலிருந்த தமிழ்ப் பெரு மக்களது நாகரிகம், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் எல்லாம், கி.மு. 2500 ஆம் ஆண்டளவில் மேல் நாடுகளுக்கும், கீழ் நாடுகளுக்கும், கி.மு. 1500 ஆம் ஆண்டளவில் இந்தியாவிலே உள்ள சிந்து நதிக்கரை ஹரப்பா போன்ற இடங்களுக்கும் பரவிச் சென்றது என்பதற்குரிய வரலாற்றுக் குறிப்புக்கள் ஏராளமாக இருக்கின்றன.

வரலாற்று ஞானி ஹிராடெடஸ் மட்டுமன்று, பிளினி, பெரிப்ளுஸ், தாலமி, மெகஸ்தனிஸ், யுவான் சுவான், பாகியான், இத்சிங், மார்கபோலோ, அர்ரியன் இண்டிகா, அல்பெருனி போன்ற பல்நோக்குப் பூகோள, வரலாற்று, நாகரிக, இன ஆய்வு,

மதஞானிகள் ஆகியோரது வரலாற்றுக் குறிப்புக்களில் ஹிராடெடஸ் கூறிய தமிழ் நாகரிகப் பண்பாடுகளின் வளரச்சிகளை அறிந்து; தமிழ் நாகரிகத்தின் அருமையை, பெருமையை நாம் உணர்கின்றோம்.

# 7. ஹிராடெடசின் சில நீதிக் கதைகள்

சிறிய நகரங்களின் வரலாறுகளை இனிக் காண்போம். இந்தச் சிறிய நகரங்கள் முன்பு பெரிய நகரங்களாக இருந்தன. பெரிய நகரங்களாக இருந்த பல, இப்போது சிறிய நகரங்கள் ஆகி விட்டன. என்னுடைய காலத்தில் பெரியனவாக இருந்த நகரங்கள் - எப்படிச் சிறியனவாகச் சிதைந்தன? இனி சிறிய நகரங்களைப் பற்றியோ, பெரிய நகரங்களைப் பற்றியோ நான் கவலைப் பட்டு எழுதப் போவதில்லை. காரணம், இந்த உலகில் எவருமே நீண்ட நாட்கள் வளமாக வாழ்ந்தது இல்லை; கிடையாது.

காண்டெளல்ஸ், லிடியா என்ற நாட்டை ஆண்ட கடைசி மன்னர். அவர், ஹிராக்ளிடுகளின் பரம்பரையிலே வந்தவர். மெர்ம்னடே என்ற ஒரு சந்ததியில் பிறந்தவர் கைஸ் என்பவர். இவர் லாடியவில் அவரது பரம்பரை ஆட்சி செய்தபோது முதல் அரசராக விளங்கியவர். டெல்பி நகரக் கோயிலுக்கு எவருமே அன்று வரை கொடுத்திராத அளவுக்கு அவர் ஏராளமாக வெகுமதிகளை வாரி வழங்கியவர். இவர் கி.மு. 716 முதல் 678 ஆம் ஆண்டு வரை அரசு புரிந்தார்,

காண்டெளஸ், தன்னுடைய மனைவி, அழகே மறுபிறவி எடுத்ததைப் போன்ற பேரழகி என்று தனக்குத் தானே எண்ணி மகிழ்ச்சியடைபவர். ஒரு நாள் - அவர் தனது மெய்ப் பாதுகாவலனாக உள்ள கைஸ் என்பவனை அழைத்து, தனது மனைவி பேரழகி என்றும், அதுதனக்கும் தெரியும் என்றும், ஆனால், பிறர் அந்த அழகைப் பார்த்து ஒப்புக் கொண்டால்தான்

உண்மையாக இருக்கும் என்று கூறி, தனது படுக்கை அறையில் நீ மறைந்து கொண்டு, எனது மனைவி அவளது ஆடைகளை அகற்றி நிர்வாணமாக இருக்கும் போது அவள் அழகைப் பார்த்து; அது எப்படிப்பட்டது என்று கூறு என்று தனது அந்தரங்கமான அந்த மெய்க்காப்பாளனுக்குக் கட்டளையிட்டான்.

'மன்னா, என்னதான் நான் தங்களது அந்தரங்கப் பணியாளனாக இருந்தாலும், இப்படி நீர்கட்டளை இடுவது தகுமா? நியாயமா? என்னை அதே குற்றத்தைச் சுமத்திக் கொன்று விட முடிவு கட்டி விட்டீரா?' என்று பயந்து நடுநடுங்கிக் கேட்டான்.

'மெய்க்காவலா, உன்னை அப்படி யெல்லாம் சொல்லிக் கொல்ல மாட்டேன். ஆனால் ஒன்று, படுக்கை அறையில் நீ மறைந்திருப்பது அவளுக்கே தெரியக் கூடாது. ஜாக்கிரதையாக இரு. எந்தப் பெண்ணும் தனது கணவனிடம்தான் நிர்வாணமாக இருப்பாள். பிறரைப் பார்க்க விடமாட்டாள், என்ன நடக்குமோ தெரியாது. மிகவும் எச்சரிக்கையோடு நான் உத்தரவிட்ட வேலையைச் செய்' என்றான் அசரன்! பணியாளனும் சரியெனப் பணிந்தான்.

அடுத்த நாள், அரசனும் - ராணியும் படுக்கை அறையில் நுழைந்தார்கள். அவர்கள் நுழைந்ததும் ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு அப்பணியாள் கதவிடுக்கில் மறைந்து கொண்டான். ராணி, கணவனது விருப்பப்படி தனது எல்லா ஆடைகளையும் அகற்றி நிர்வாணமாக நின்றாள். மெய்மறந்து ரசித்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் கழித்து, காவலன் வெளியே செல்லக் கதவை ஓசை விழாமல் திறந்தான்.

இதை உடனே கவனித்துவிட்ட ராணி கணவனிடம் நெருங்கி, 'இது உங்களது முன்னேற்பாடா? வெட்கமாக இல்லை உமக்கு?' என்று கோபப் பட்டாள்.

'இப்போது என்ன நடந்து விட்டது. அவன் உன்னைத் தொட்டானா? பார்த்தான், அவ்வளவுதானே, அதற்குப் போய் நீ அலட்டிக் கொள்ளலாமா?' என்றான் அரசன்.

'ஒருவனது மனைவி உடலழகை நிர்வாண நிலையில், மற்றோர் ஆண்மகன் பார்ப்பது தவறாகப் படவில்லையா?' இதுவரை எனது உடல் உன் ஒருவருக்கே உரிமையானது என்று எண்ணினேன். இப்போத வேறொருவனையும் சொந்தம் கொண்டாடச் செய்து விட்டீரே! நாளை மேலும் என்னென்ன செய்யச சொல்வீரோ!' என்று கோபமாக வெளியேறினாள் ராணி.

மறுநாள் ராணி, அந்த அந்தரங்க மெய்க் காவலனை அழைத்தாள்! அவன் ஒன்றும் அறியாதவன் போல அரசி எதிரே வந்து நின்றான்.

'கைஜிஸ்; நேற்றிரவு என் உடலழகைப் பார்த்தீரா? நன்றாக ரசித்தீரா? அது எவ்வாறு இருந்தது?'

'மகாராணி, தங்களது கணவர் கட்டளைப் படிதான் நடந்தேன். நானாக உங்களது அறைக்கு வரவில்லை. நான் நிரபராதி' என்றான்.

'போகட்டும், நான் உமக்கு இரண்டு கட்டளைகளை இடுகிறேன். ஒன்று, இதோ உள்ள வாளால் மன்னனைக் கொன்று பிணமாக்கு. என்னை உடனே உனது மனைவியாக்கிக் கொண்டு இந்த அரசிலே அமர்ந்து மன்னனாக ஆட்சி செய். இல்லையென்றால், அதே வாளால் உன்னையே நீ மாய்த்துக்கொள்.

'ஏன் இந்த இரண்டு கட்டளைகளைப் போட்டேன் தெரியுமா? உமக்கு மனைவி இல்லாத என்னை, நிர்வாண நிலையில் நீ பார்த்தது தவறு; ரசித்தது அதைவிடப் பெரிய தவறு; என் உடல் எச்சில் பட்டு விட்டதா - இல்லையா? நீயே யோசனை செய்."

ஒருவனுக்குச் சொந்த மில்லாத ஒரு பொருளை நீ சொந்தம் கொண்டாடலாமா? அது தவறல்லவா? அதனால், அதே

பொருளை நீ சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். அல்லது, நீ சாகவேண்டும். நீ செத்தால், இந்தமன்னன், இதுபோல வேறொருவனை பழி செயலில் ஈடுபடுத்தும் இந்நிலை நின்றுவிடும். பயநிலை நிலைத்து நிற்கும். அப்படிச் செய்யும் புத்தி வரும்போதெல்லாம், உனது வாளால் நீ வெட்டுண்டு துடிதுடிக்கும் அம் மன்னனுக்கு நீதி புகட்டும்!''

''அதனால், ஒன்று நீ சாக வேண்டும் அல்லது மன்னன் சாகவேண்டும்! அப்போது தான், எனக்கு ஒரே ஒரு கணவர் இருக்க முடியும். என்ன கூறுகிறாய் கைஸ?''

''மகாராணி, என்ன சொல்வது என்றே தெரியவில்லையே!'' என்று தவித்தான். ஒரு நிமிடம் யோசித்தான்! முடிவும் செய்து விட்டான். என்ன அந்த முடிவு?

ஓடினான் கைஸ்! வேறோர்வாளை ஏந்தினான்! எந்த இடத்தில் ராணிக்குக் களங்கம் உண்டானதோ அதே இடத்தில், மறுநாள் அரசரைக் குத்திக் கொலை செய்தான்! மாண்டான் மன்னன் காண்டெளஸ்! சிம்மாசனத்தில் ஏறி கைஸ் அமர்ந்து கொண்டான்! கரும்பு தின்னக் கூலியா!

கைஸ் மன்னனாக அரியாசனத்தில் அமர்ந்தானே தவிர, அந்த நாட்டு மக்கள் அவனை அரசனாக மதிக்கவில்லை; ஏற்கவில்லை. மறுத்தார்கள். அப்போது டெல்பி கோயிலின் தேவதை அசரீரியாகி, கைஸ் மன்னனாகும் நியதி உள்ளவன் என்று குரல் எழுப்பியது. மக்களும் மறுபேச்சே இல்லாமல் அவனை அரசனாக ஒப்புக் கொண்டு விட்டார்கள்!

அசரீரி குரல் கேட்டு கைஜிசை அரசனாக ஏற்றுக் கொண்ட மக்கள், நேராக டெல்பி நகரிலே உள்ள கோயிலுக்குச் சென்று குறிகேட்டார்கள். அப்போது டெல்பி என்ற காளிதேவதை, மன்னனைக் கொன்று அரியணை ஏறிடும் கைஸ் பரம்பரையின் ஐந்தாம் பரம்பரை, இதே போல ஒரு கொலையைச் செய்து, அரசை

அபகரிக்கும் பழிக்குப் பழியை உருவாக்கும் என்றது. மக்கள் அதிர்ச்சி அடைந்து ஊர் திரும்பினார்கள்!

இந்த வரலாற்றுக் கதையை லிடியா மக்கள் கூறும் நீதிக்கதை என்று ஹிராடெடஸ் தனது நூலிலே எழுதியுள்ளார்.

இதைத்தான் திருவள்ளுவர் பெருமானும் தனது குறளில்,

''அஃகாமை செல்வத்திற் சியாதெனின்; வெஃகாமை
வேண்டும் பிறன் கைப் பொருள்.''

(திருக்குறள் : 178)

## 8. தொட்டது எல்லாம் பொன்

லிடியா நாட்டை ஆண்டிருந்த ஹிராக்ளிட் பரம்பரையின் இறுதி மன்னரான காண்டௌல்ஸ்; தமது மனைவி அழகை ஊரார் மெச்ச வேண்டும் என்ற பேராசையால், மெர்ம்னடே பரம்பரையைச் சார்ந்த கைஜிஸ் என்ற தனது மெய்க் காவலனைக் கொண்டு மனைவியை நிர்வாணமாகப் பார்க்க வைத்த மானமற்றச் செயலால், கைஜிஸ் வாளுக்கு அம்மன்னன் பலியானான்.

கைஜிஸ் அந்த நிர்வாண ராணியை மறுமணம் புரிந்துகொண்டு, மன்னனானான். இவன் மெர்மனடே பரம்பரையின் முதல் அரசனாக, கி.மு.716-678 ஆம் ஆண்டுவரை ஏறக்குறை 38 ஆண்டுகள் அரசு புரிந்தான்! லிடியாவின் சக்கரவர்த்தியானதும், கைஸ் டெல்பி கோயிலுக்கு ஏராளமான விலைமதிப்புடைய பொருட்களை வாரி வழங்கி, கோயிலை மேம்படுத்தினான்! அந்த விவரம் இதோ:

கைஜிஸ் டெல்பி கோயிலில் உள்ள அலங்காரப் பணிகளுக்கு எவ்வளவு வெள்ளி வேண்டுமோ அவ்வளவையும் ஏராளமாக அனுப்பி வைத்தான்.

கோயில் உணவுகளைக் கலந்து மக்களுக்கு வழங்குவதற்கான, பொன்னால் செய்யப்பட்ட பல பாத்திரங்களை அவன் வழங்கினான். அவற்றுள் ஆறு பொற்கிண்ணங்கள் மட்டும் 2500 பவுண்டு எடையுள்ளவை. இப்போது அவை கொரிந்தியரின் பொதுப் பண்டக சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. மைதாஸ் என்ற மன்னன் அக்கோயிலுக்குத் தனது தங்க அரியாசனத்தையே தானப் பொருளாகத் தந்தான்.

இவ்வளவு பெருமைக்கும் புகழுக்குமுரிய டெல்பி கோயிலின் வரலாறு என்ன? டெல்பி என்ற நகரம், கிரேக்க நாட்டிலே உள்ள போசிஸ் மாவட்டத்தில் உள்ள புகழ் பெற்ற ஒரு ஊராகும். அப்பொலோ என்ற தெய்வத்தின் அசரீரி, அங்கே பெரும் புகழ் பெற்றிருந்தது. பார்னசஸ் என்ற மலையின் சரிவில் அந்தக் கோயில் அமைந்திருந்தது.

அந்த மலைக் கோயிலின் முதல் பெயர் பைதோ என்பதாகும். கி.மு. 850 ஆம் ஆண்டில் வாழ்ந்த கிரேக்கக் கம்பர் என்ற புகழுக்குரிய ஹோமர் என்ற பெருங்கவிஞர், தான் எழுதிய 'இலியட் ஒடிசி' போன்ற உலகப் புகழ் வாய்ந்த காவியங்களுள், இக்கோயிலை டெல்பி என்ற பெயரிலே குறிப்பிட்டுள்ளார்.

உலகப் புகழ் பெற்ற தத்துவஞானி சாக்ரடீசின் விசாரணை முடிவதற்கு முன்பும் பின்புமாக சிறையிலே அவர் அடைக்கப்பட்டபோது, விசாரணை முடிந்து நச்சுக் கோப்பைஏந்தி அதை அருந்தி சாக வேண்டும். என்ற தண்டனை வழங்கப்பட்ட பின்பு; அதை நிறைவேற்றாமல் சில நாட்கள் ஏதென்ஸ் அரசு தள்ளி வைத்ததற்கு இந்த டெல்பி கோயிலின் திருவிழாதான் காரணமாக இருந்தது.

பாதுகாப்பான ஒரு மலைச் சரிவில் கட்டப் பட்ட கோயில் என்பதால், கோயிலுக்குள் இருக்கும் பொன்பாத்திரங்கள், வெள்ளிக் கிண்ணங்கள், தங்க சிம்மாசனம் ஆகியவற்றைத் திருட

திருடர்கள் அங்கே வருவது இல்லை. வேறு வகையான செல்வங்களும் அங்கே அதிகமாகக் குவிக்கப்பட்டிருந்து. செல்வ வளமிக்க ஒரு கோயிலாக அது அக்காலத்தில் இருந்தது.

டெல்பி தேவதைக் கோயிலின் நடுப் பகுதியில் ஒரு சிறிய துவாரம் வழியாக அடிக்கடி ஒரு வகை வாசனை கமழும் புகை வெளிவந்து கொண்டிருக்கும். அத்துவாரத்தின் மேல்ஒரு முக்காலியைப் போட்டு அதன் மேல் 'பைதியா' என்று கூறப்படும் கோயில் பூசாரிப் பெண் அமர்ந்து கொண்டு, உடலை ஒரு போர்வையால் மூடிக்கொண்டு, அசரீரி போன்ற குரலோசையுடன் குறி சொல்வாள்.

அப்பொலோ தெய்வமே அங்கு வந்து புகை உருவத்திலே குறி கூறுவதாக மக்கள் நம்பினார்கள். அச் சொற்களை மிகக் கவனமாக மக்கள் பின்பற்றி நடப்பார்கள் அவையாவும் ஏதோ ஒரு தெய்வப்பா' போல எண்ணப்பட்ட செய்யுள் வடிவமாகும்.

டெல்ப கோயிலின் அப்பொலோ அசரீரி இருக்கிறது என்று எப்படி அந்நாட்டு மக்களால் கண்டுபிடிக்கப்பட்டது? என்ன காரணம்? என்ற கேள்விகள் எழக் கூடும். ஹிராடெடஸ் மக்களிடம் விசாரணை செய்த சம்பவங்களை விளக்கித் தனது நூலின் எழுதியிருப்பதாவது.

கோயில் நடுப்பகுதியிலிருந்த துவாரத்தின் வழியே வாசனையுடன் கூடிய புகை வெளிவந்து கொண்டிருந்த போது, வெள்ளாடுகள் சில அந்த துவாரத்தின் மேல் ஏறி நின்று கொண்டிருந்தன. அதனால் அந்த ஆடுகளுக்கு ஒரு விதமான இழுப்பு நோய் வந்து அங்கேயே எல்லாம் மயங்கி, சுருண்டு விழுந்துவிட்டன. பூசாரிகள் இதைப் பார்த்தார்கள்! உடனே தூபதீபங்களிட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டார்கள்.

எழுந்தது அப்போது அசரீரி வாக்கு! அந்த அருள்வாக்கில், அக்கோயிலில் பெண்கள் தான் குறி சொல்லவேண்டும் என்று

கட்டளையிட்டது. அன்று முதல் அந்தக் கோயிலில் பெண்களே குறி சொல்லி வந்ததால், அப்பொலோ அசரீரிவாக்கு அங்கே கேட்கப் படுகிறது என்ற புகழும் அக்கோயிலுக்கு ஏற்பட்டது.

## அப்பொலோ தெய்வ வரலாறு

அப்போலோ என்ற தெய்வம் ஜியுஸ் என்ற கடவுளுக்கும், லீடோ எனும் தேவதைக்கும் டெலாஸ் என்ற தீவில் பிறந்தவர். ஹீரா எனும் தேவதை செய்யும் கொடுரக் கொடுமைகளைத் தாங்க முடியாத லீடோ தேவதை; அந்தத் தீவுக்கு ஓடி ஒளிந்து கொண்டாள்.

அப்பொலோ, தண்டனை தரும் கடவுள், உதவி செய்யும் கடவுள், தீமைகளைப் போக்கும் கடவுள், இன்னிசை வழங்கும் கடவுள், கால்நடைகளைக் காக்கும் கடவுள், நகரங்களை உருவாக்குவதில் பெரும் பங்கு கொள்ளும் கடவுள், எல்லாவற் றுக்கும் மேலே வானவீதியிலே வலம் வந்து கொண்டிருக்கும் ஒளி வழங்கும் கடவுள், என்று பலவிதமான அதிகாரங்களைப் பெற்றுள்ள கடவுள் ஆகும்.

இவ்வளவு அதிகாரங்களை ஒரு கடவுள் பெற்றுள்ளார் என்பதாலும், அதிலும் மக்கள் வாழ்க்கைக்குரிய எல்லா அதிகாரங்களும் ஒரே கடவுளிடமுள்ளவராக இருப்பதாலும், இந்த அப்பொலோ தெய்வத்தை கிரேக்க மக்கள் மூலமாக ரோமானியர்களும் பெற்றுக் கொண்டார்கள்.

டெல்பியில் பெண் பூசாரிகள் குறிசொல்லும் சம்பவங்கள், இன்றும் தமிழ் நாட்டில் பல இடங்களில், அம்மன் கோயில் மண்டபங்களில் திருவிழா போல நடைபெற்று வருவதைப் பார்க்கிறோம்.

ஆசியா மைனர் என்ற நாட்டின் ஒரு பகுதியான பிரிஜியாவில் கார்டியஸ், மைதாஸ் என்ற இரு வல்லரசர்கள் ஆண்டுவந்தார்கள். இந்த பிரிஜியா என்ற பகுதியிலே தான் முதன் முதல் புல்லாங்குழல் என்ற இசைக் கருவி செய்யப் பட்டது என்றும், கிரேக்க நாட்டுக்கு

இக் கருவி பிறகுதான் சென்று பரவியது என்றும், இசையிலே பெரும் புகழ் பெற்ற இந்த நாடு; பிறகு புகழ் உருகி, அறியாமை பெருகி, மடமையிலே மூழ்கிடும் நிலை உருவாகி, மடமையாளர் வாழும் நாடு என்ற இகழ்வான பெயரையும் பெற்றதாக, ஹிராடெடஸ் அந் நாட்டைப் பற்றி விவரிக்கின்றார்.

## தொட்டதெல்லாம் பொன்னான கதை

பிரிஜியா நாட்டின் மன்னரானமைதாஸ் என்பவரைப் பற்றிக் கிரேக்க நாட்டில் தொட்டதெல்லாம் பொன்னான கதை! என்ற ஒரு நீதிக் கதை உள்ளது.

டயோனிசஸ் என்ற கடவுள், மைதாஸ் மன்னரிடம் 'உனக்கு என்ன வரம் வேண்டும் கேள், தருகிறேன்' என்று கூறினார்; உடனே மைதாஸ், நான் தொட்ட தெல்லாம் பொன்னாக வேண்டும் என்று கேட்கவே, 'சரி' என்று டயோனிசஸ் தெய்வமும் சிரித்துக் கொண்டே வழங்கி விட்டது.

மன்னன் மைதாஸ் உடனே தமது மகளை அன்புடன் தொடவே, அவள் பொற்சிலை ஆகிவிட்டாள். அடுத்துப் பசிக்குப் புசிக்க உணவைத் தொட்டார்; அதுவும் பொன்னாக மாறிவிட்டது. பசிவாட்டிற்று; கோரமாக எடுத்தது தாகம். உடனே; மன்னன் மீண்டும் டயோனிசஸ் என்ற கடவுளை வணங்கி தனது நிலையிலே இருந்து தப்பிக்க வழி செய்யுமாறு வேண்டினார். உடனே அந்தத் தெய்வம், திமோலஸ் மலையருகே உள்ள பெக்டோலஸ் ஆற்றிலே நீராடினால் பழையபடி வாழமுடியும் என்றார். அதே போல மன்னன் செய்து முன்பு இருந்த நிலையில் வாழ்ந்தார். தனது மகளையும் அதே நதியில் நீராட வைத்து மீண்டும் பழைய உருவத்தைப் பெறச் செய்தார்.

ஆனால், ஓர் அதிசயம் திடீரென்று நடந்தது; அந்த அரசன் எந்த ஆற்றில் நீராடினானோ, அந்த ஆற்று மணலெல்லாம் தங்கப் பொடிகளாக, மாறி விட்டது.

மன்னன் மைதாசைப் பற்றி மற்றுமோர் கருத்தையும் ஹிராடெடஸ் அறிவிக்கிறார். ''ஒரு நேரம் பான் என்பவர் புல்லாங்குழலிலும், அப்பொலோ ஏனும் தெய்வம் யாழிலும் பாட்டுக்களை வாசித்துக் கொண்டிருந்தார்கள். இந்த இருவரில் இசைக் கருவிகள் வாசிப்புக்களில் எவர் வல்லவர் என்ற போட்டிக்குரிய தீர்ப்புக் கூறும் நடுவராக மைதாஸ் நியமிக்கப்பட்டிருந்தார். பான் வாசித்த புல்லாங்குழல் இசையே சிறந்தது என்று நடுவர் தீர்ப்புக் கூறினார்.

சினம் பொங்கிய அப்பொலோ தெய்வம், மைதாஸ் காதுகளைக் கழுதையின் காதுகளாக மாற்றிவிட்டார். இது வேறு எவருக்கும் தெரியாது. ஒரு நாள் அவர் முடிவெட்டிக் கொள்ளும் போது தனது தலையிலே போட்டிருந்த முக்காட்டை அகற்றிய போது, அந்த முடி வெட்டுபவன் மைதாஸின் கழுதைக் காதுகளைப் பார்த்து விட்டான்.

இந்த ரகசியத்தை அவன் அந்த ஊர்மக்களுக்கு எப்படித் தெரிவிப்பது என்று எண்ணினான். மன்னனுக்கு இருப்பது கழுதைக் காதுகள் என்று வெளியே கூறினால், அரசனைப் பற்றி இழிவாகப் பிரச்சாரம் செய்கிறான் என்ற குற்றத்துக்கு ஆளாகி, சிரச்சேதம் ஏற்பட்டு விடுமே என்ற பயமும் அவனுக்குள் இருந்தது. அதற்காக ஒரு தந்திரம் செய்தான்.

நான்கு வீதிகள் ஒன்று கூடும் இடத்தில் ஒரு குழிதோண்டி, அதில் ஒரு நாணல் புல்லை நட்டு, அக்குழியின் உள்ளே தனது வாயை வைத்து, அரசர் காதுகள் கழுதைக் காதுகள் என்று சொல்லிவிட்டு, மண்ணைப் போட்டு குழியை மூடித் தனது எண்ணத்தை ஊராருக்குத் தெரிவித்தான். ஆனால், காற்றில் வளைந்து வளைந்து அசையும் போதெல்லாம் 'அரசர் காதுகள் கழுதைக் காதுகள்' என்ற சொற்களை ஒலியிட்டு, பேரிரைச்சலுடன் நாணற் புல் தெரிவித்துக் கொண்டிருந்தது. அதனால், அந்த அரச ரகசியம் ஊரெல்லாம்

பரவிவிட்டது. ரகசியமான இந்தச் செய்தி ஊர்மக்களுக்குத் தெரிந்து விட்டதால் மனமுடைந்த அரசன் அதைக் கேட்டு இறந்து போனான். இந்தக் கதை இன்றும் கிரேக்க நாட்டுப் புராணங்களில் ஒன்றாக உள்ளது - என்று A Smaller classical Dictionary என்ற நூல் கூறுகிறது.

ஹிராடெடஸ் கூறியுள்ள இதுபோன்ற வரலாற்றுக் கதைகளை, அவருக்குப் பிறகு தோன்றிய நூலாசிரியர்கள் தங்களது நூல்களிலே மேற்கோள்களாகக் காட்டி எழுதியுள்ளார்கள்.

## 9. சட்ட ஞானி - சோலான்

லிடியா நாட்டை ஆண்ட ஆர்டிஸ் என்பவர் கி.மு. 678 ஆம் ஆண்டு முதல் 629 ஆம் ஆண்டு வரை, ஏறக்குறைய 49 ஆண்டுகள் ஆட்சி புரிந்த இவர், கைஜிஸ் என்ற மன்னரின் மகன் ஆவார். அவருக்குப் பிறகு ஸட்யாட்டிசும், அவரது மகன் அல்யாட்டிசும் ஆட்சி புரிந்த பிறகு, அவர் மகன் குரோசஸ் என்பவர் அரசாண்டார்.

குரோசஸ் ஆட்சியின் கீழ் லிடியர், பிரிஜியர், மைசியர், மரியாண்டினியர், சாலிபியர், பாப்ல கோனியர், திரேசியர், காரியர், அயோனியர், டோரியர், இயோலியர், பாம்பிலியர் போன்ற பல நகர மக்கள் எல்லாம் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அந்த நகரங்கள் எல்லாம் லிடியா நாட்டுப் பேரரசில் சேர்க்கப்பட்டிருந்தன.

குரோசஸ் ஆட்சியில் இவ்வாறு வெவ்வேறு இனமக்கள் ஆதிக்க அரசியலின் கீழ் பேரரசுக்கு உட்பட்டு வாழ்ந்த போதிலும் அரசியல் பிரச்னைகள் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டே இருந்தன. அந்த நேரத்தில் தலைநகரமாக சார்டிஸ் இருந்தது. அது செல்வத்தின் செழிப்பிலே இருந்ததற்கு ஏற்ப, அதிகாரம் செய்வதிலும் உச்சக் கட்டத்தில் இருந்தது.

அதனால், கிரேக்க நாட்டிற்கு அக்கால கட்டத்தின் போது, தத்துவ ஞானிகளும், ஆசிரியர்களும், கலைஞர்களும், கவிஞர் களும், மிகச் சிறந்த பேச்சாளர்களும் ஒவ்வொருவராக வந்து போகும் சிறப்பை அந்த நகர் பெற்றிருந்தது.

அவ்வாறு வந்தவர்களுள் ஒருவர் சோலான் என்பவர், அவர் புகழ் பெற்ற ஒரு சட்ட நூல் மேதை; வழக்கறிஞர்; ஏதென்ஸ் நகரக் குடி உரிமையாளரும் ஆவார். அவர் வரலாறு பற்றி சிறிது பார்ப்போம்.

சோலான் கி.மு. 639-ம் ஆண்டில் கிரேக்க நாட்டில் ஏதென்ஸ் நகரில், எக்சிசெஸ்டைடிஸ் என்பவருக்கும் பிசிஸ்டிராடிஸ் என்ற தாய்க்கும் பிறந்தவர். அவர் தந்தை ஆடம்பரமாக, செல்வச் சீமானாக வாழ்ந்தார். ஆனால் பெரும் செலவாளி.

சோலானும் தந்தையைப் போலவே வாழ எண்ணினார். அதற்குப் பணம் தேவை அல்லவா? அதனால் பெரும் தொகையை சம்பாதிப்பது எப்படி என்று சிந்தித்தார். அப்போது சலமிஸ் என்ற நகரம் யாருக்குச் சொந்தம் என்பது பற்றி, ஏதென்சுக்கும் - மெகரா நகருக்கும் கடும் போட்டியால் விவாதம் நடந்தது. அதில் சோலான் கலந்து கொண்டு விவாதம் செய்தார்.

மெகரா நாட்டினர் தோல்வி கண்டனர், அதனால் அந் நகர மக்கள் நகரை விட்டுத் துரத்தப் பட்டார்கள். ஸ்பார்டா இடையில் நடுவராக நின்று அந்தப் போரை தீர்த்து வைத்தார். அதனால் அவர் அங்கே சட்ட மன்ற தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஏதென்சுக்கு அரசியல் சட்டங்களை எழுதித் தருமாறு அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. சோலான் இயற்றிய அரசியல் சட்டங்கள் கி.மு. 580 ஆம் ஆண்டில் மர உருளைகளிலும், கனக் கூம்புகளிலும், பொறிக்கப் பட்டன. அவர் அரசியல் சட்டங்களை இயற்றியதும், உலகைச் சுற்றிவர வேண்டும் என்று விரும்பினார். அந்த விருப்பத்தால் அவருக்குரிய நன்மை என்ன?

முதன் முதலாக அவர் தனது சுற்றுப் பயணத்தை எகிப்து நாட்டில் துவக்கி, பிறகு சைரக்யூஸ் போன்ற நாடுகளுக்குச் சென்று, சிறப்பான வரவேற்புகளைப் பெற்று, சோலி என்ற நகரை நிறுவி பின் சார்டிஸ் நகர் வந்தார்.

சட்ட மேதை சோலான், பலதரப்பட்ட மக்கள் ஒரு நாட்டில் கூடி வாழ்வதற்கான அரசியல் சட்ட நூல் ஒன்றை இயற்றியிருந்தார். தான் எழுதிய சட்ட விதிகள் தனது காலத்திலோ , பின்னாலோ எக் காரணத்தைக் கொண்டும் மாற்றியமைக்கும் அல்லது சட்டத் திருத்தம் செய்யும் இக்கட்டான ஒரு நிலை வந்துவிடக் கூடாது என்பதற்காகவும், பிற நாடுகளில் சட்டங்கள் எப்படி இயங்கு கின்றன என்பதை ஆராயவும், அவர் பிற நாடுகளை எல்லாம் சுற்றிச் சுற்றிப் பார்த்து, அங்குள்ள மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதை அறிந்திட பத்தாண்டுக் காலமாக பயணம் செய்து கொண்டிருந்தார்.

அந்தப் பயணத்தின் போது அவர் சார்டிஸ் நகருக்கும் வந்திருந்தார். ஏனென்றால், அந்த நாட்டில் பல்வேறு இன மக்கள் வாழ்கின்றதால், அங்குள்ள மக்களிடையே அரசியல் சட்டங்கள் எப்படி இயங்குகின்றன என்பதையும், உலக நாடுகளில் சட்டம் எவ்வாறு அமுலாகின்றது என்பதை அறியவுமே அந்தப் பயணத்தை மேற்கொண்டு, அந்த நகருக்கு வந்தார் என்பது குறிப்பிடத்தக்க ஒரு காரணமாகும்.

இந்த நேரத்தில் குரோசஸ் ஏதென்ஸ் நாட்டில் இல்லாததால், அவர் எழுதிய சில சட்டங்களை மாற்றியமைக்க முடியாமல் குழப்பமடைந்தார்கள் ஏதென்ஸ் மக்கள்.

ஏனென்றால், அவர் எழுதிய சட்டங்களின் நன்மை தீமைகளை அறிந்து கொள்ள அவருக்கு பத்தாண்டுக் காலக் கெடுவை ஏதென்சு மக்கள் அப்பொலோ தெய்வத்தின் மீது சத்தியம் செய்து கொடுத்திருந்தார்கள். அவரில்லாமல் எந்தச் சட்டத்தையும்

மாற்றுவதில்லை என்றும் வாக்களித்தார்கள். அதனால் குழப்ப மடைந்திருந்தார்கள்.

சார்டிஸ் நகருக்கு வருகை தந்திருந்த சோலானை, குரோசஸ் மன்னன் மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தார். பிறகு சில நாட்கள் கழித்து, குரோசஸ் தம் காவலர்கள் மூலமாகத் தனது கருவூலத்தை அவருக்குக் காட்டு மாறு கட்டளையிட்டார்.

சோலான் அவற்றை எல்லாம் பார்வையிட்ட பிறகு. 'குரோசஸ், ஐயா எனது கருவூலத்தை நன்றாகப் பார்த்திருப்பீர்கள். இந்த உலகத்தில் நீங்கள் பார்த்தவர்களுள் யார் மிக்க மகிழ்ச்சியுடன் இருப்பவர்?' என்ற கேள்வியைக் கேட்டார். இவ்வளவு செல்வத்துடன் தாம் ஒருவர்தான் உலகத்தில் இருப்பதாக எண்ணிய மனக் கர்வத்தால் அவர் அந்தக் கேள்வியைக் கேட்டுள்ளார் என்பதைச் சோலான் புரிந்து கொண்டார்.

மன்னனது மனதைத் தெரிந்து கொண்ட குரோசஸ், அவரது கருவூலத்தைப் பற்றிக் கருத்துக் கூற மறுத்து விட்டார். அதற்கு மாறாக, 'டெல்லாஸ் என்ற ஏதென்ஸ் குடிமகனே மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பவர்' என்றார்.

அதிர்ச்சியடைந்த மன்னன், 'இவ்வாறு நீங்கள் சொல்வதற்கு என்ன காரணம்' என்றார்?

'அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன என்றார். உடனே - அந்த மன்னன், தனக்கு இரண்டாவது இடத்தையாவது தரமாட்டாரா? என எண்ணி, 'ஐயா அவருக்கு அடுத்தப் படியாக இருக்கின்ற இரண்டாவது அதிருஷ்டசாலி யார்?' என்று கேட்டார்.

'இரண்டாவது அதிருஷ்டசாலி ஆர்கோஸ் நகரத்திலே உள்ள இரண்டு பேர்' என்றார் சோலான். அப்போதும் தனக்கு இரண்டாவது இடம் கிடைக்கவில்லை என்று கவலைப் பட்ட குரோசஸ், 'அதற்கு என்ன காரணம்' என்று கேட்டார்.

அந்த இருவர்களின் தாயார் வயதேறிய மூதாட்டி. அவள் ஒரு திருவிழாவிற்குப் போக ஆசைப் பட்டாள். நடக்க முடியவில்லை. அதனால், அந்தக் கிழவியை ஒரு தள்ளுவண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு ஆர்கோஸ் நகருக்குப் போனபோது, ஹீரா தேவதை அவர்களைப் பார்த்து, என்ன வரம் வேண்டும் என்று கேட்டாள். எந்த வரமும் வேண்டாம் என்றார்கள் - அந்த இருவரும். அப்போது அவர்களது தாயாரான வயதான மூதாட்டி, தேவதையிடம், 'இவர்களுக்கு நல்லகதியைக் கொடுத்துவிடுங்கள்' என்று கேட்டாள்.

பெற்றோருக்குத் தொண்டு செய்து கொண்டே இறந்துவிட்ட அந்த இருவர்கள்தான் மகிழ்ச்சியின் இரண்டாவது இடத்திலே இருப்பவர்கள் என்றார். சோலான்!

கடைசியாகக் கேட்ட குரோசஸ், 'எனது சொந்த மகிழ்ச்சியைப் பற்றி உங்களது முடிவு என்ன?' என்றார். அதற்கு, சோலான், "எவன் ஒருவன் கடைசிவரை மகிழ்ச்சியுடன் இருக்கின்றானோ, அவன்தான் கொடுத்து வைத்தவன். அப்படி இல்லாதவன், அதிருஷ்டக்காரன் ஆவானே தவிர, மகிழ்ச்சி உடையவனாக இருக்க மாட்டான்." என்றார்.

எவன் ஒருவன் தனது வாழ்நாள் முடிவு வரை அமைதியுடன் வாழ்ந்து சாகின்றானோ, அவன் தான் சிறந்த மகிழ்ச்சியாளன் ஆவான் என்றும் கோலான் சொல்லி முடித்தார் பிறக சார்டிஸ் நகரத்தை விட்டுப் புறப்பட்டு விட்டார்.

சோலான் புறப்பட்ட அன்று குரோசல் ஒரு கெட்ட கனவைக் கண்டார். அதாவது, அவனுடைய மகன் ஒரு பன்றியின் படிம உருவத்தால் சாவான் என்பதே அந்தக் கனவு ! அதன் படி அந்த சிறுவன் மாண்டான்!

இவ்வாறு சட்டஞானி சோலனுக்கும், மன்னன் குரோசசுக்கும் இடையே நடை பெற்ற மேற்கண்ட உரையாடல் இலக்கிய

உலகிலே மிகப் புகழ்பெற்ற சம்பவமாகத் திகழ்ந்தது. சட்ட மேதை சோலான் 80 வயதுவரை வாழ்ந்து, இறுதியாக ஏதென்ஸ் நகரத்திலே கி.மு.559-ம் ஆண்டில் காலமாகி மறைந்தார்.

## 10. வராக அவதாரம் வந்தது எப்படி?

உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவரான ஹோமர் HOMER தனது 'இல்லியட் ஒடிசி' என்ற ஆதிக் காவியத்தில் ஹீரா என்ற பெண் தெய்வத்தை ஜியுஸ் என்ற ஆண் தெய்வத்தின் மனைவி என்று குறிப்பிடுகிறார். ஹோமர் காலம் கி.மு.850-ம் ஆண்டாகும். அக்காலக் கடவுட் கொள்கையை ஹிராடெடஸ் கூறும் போது, ஹீரா தேவதைக்குரிய திருக்கோயில்கள் சாமோஸ் தீவிலும், ஆர்க்கோஸ் தீவிலும், டெல்பி தேவதைக் கோயில் டெல்பி நகரில் இருந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

ஹீரா என்ற கிரேக்கப் பெண் தெய்பம், தமிழ் நாட்டிலே உள்ள துர்க்கை தெய்வம் போலவாகும்.

அதனைப் போலவே, இந்திய நாட்டின் வராக அவதாரம் கதையின் சாயலை நினைவு படுத்தும் கதை ஒன்று, கிரேக்க நாட்டின் சார்டிஸ் நகரத்தில் கி.மு. 859-ல் நடை பெற்றுள்ளது. அக் கதையை ஹிராடெடஸ் கூறுவதை அப்படியே கீழே தருக்கின்றோம்.

சோலான் சார்டிஸ் நகரைவிட்டுப் புறப்பட்டதும், அன்றிரவு குரோசஸ் மகன்பன்றி ஒன்றினால் கொல்லப்படுவதாகக் கனவு கண்டான். அதற்குப் பிறகு, மன்னனின் மனம் குழப்பமடைந்தது. அடுத்த நாள் அந்தச் சிறுவன் தூங்கிக் கொண்டிருக்கும்போது, குழந்தைக்கு மேலே மாட்டப் பட்டிருந்த பன்றி வடிவப் பொம்மை உருவம் அந்தச் சிறுவன் மீது விழுந்து, மன்னன் கண்ட கனவிற்கேற்றவாறு அரசன் மகன் இறந்து போனான். மன்னன் கண்ட கனவு உண்மையாகி விட்டது.

இந்த கிரேக்கக் கதைக்கு ஏற்றவாறு இந்திய நாட்டிலும் ஒரு கதை இருக்கிறது. இந்தியக் கதை கி.பி.505 ஆம் ஆண்டுக்கு இடையே நடந்த கதையாகும். மேற்கண்ட காலத்திற்கிடையே வாழந்தவர் வராகமிகிரர் என்பவர். இவர் ஒரு சோதிட வித்தகர். அவர் எழுதியதே 'பிருகத் சம்ஹிதை' என்ற சோதிட நூல் என்பர் வரலாற்றாசிரியர்கள்.

வராக மிகிரர்குப்த சாம்ராச்சியத்தின் ஆருட நிபுணர். அவர் பத்து வயதாக இருந்த போது, அதாவது கி.பி. 515 ஆம் ஆண்டில், தம் உறவினர் ஒருவருடன் அரசவைக்குச் சென்றார். அப்போது மன்னனின் குழந்தைக்கு சோதிடம் எழுதிட அரசவை விவாதம் செய்து கொண்டிருந்தது. வழக்கம் போல வருவாய்க்குரிய வாறு ஹோ ஹோ என்று பேசும் சோதிடர்களைப் போல அந்த அரசவையும் மன்னன் குழந்தையைக் குறித்து மிகப் பிரபலமாக சோதிடப் பலன்களைக் கூறியது.

அப்போது வராகமிகிரர்எனப்படும் மிகிராகுலன் எழுந்து மன்னன் குழந்தைக்கு இரண்டாண்டு, ஆறுமாதம், மூன்று நாட்கள் வரை பாலரிட்டம் என்ற தோஷம் இருப்பதாகவும், குறிப்பிட்ட நாள் முடிந்ததும் குழந்தைக்கு ஒரு பன்றியினால் மரணம் ஏற்படுமென்றும் கூறினான். இதனால், அரசவைக்கும், அரசனுக்கும் கோபம் வந்தது. இருந்தாலும், மன்னன் சிறிது நேரம் சிந்தித்து, சோதிடம் கூறியவன் மேலெழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, சோதிடனை நோக்கி, 'சிறுவனே நீ கூறுகிற படி குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நடை பெறாவிட்டால் தலையைத் துண்டிப்பேன், தெரியுமா? என்று கேட்க, மிகிராகுலன் சரியென ஒப்புக்கொண்டான்.

அரசன் ஒரு தீவில் கொண்டு போய், யாருக்கும் தெரியாதபடி ரகசியமாக ஓர் அரண்மனை போன்ற மாளிகையைக் கட்டித் தக்க பாதுகாப்புக்களுடன் குழந்தையைப் பாதுகாத்து வந்தான். சோதிடனின் கெடுநாட்கள் கழிந்தன. எடுத்துவா குழந்தையை

என்று மன்னன் பணியாளர்களுக்கு ஆணைவிடுத்தான். உள்ளே சென்ற காவலர் கண்ட காட்சி என்ன தெரியுமா? களிமண்ணால் செய்யப்பட்ட பன்றியின் படிமம் ஒன்று சுவரின் மேலே மாட்டப்பட்டிருந்தது பல்லி ஒன்று அதன் மேல் ஊர்ந்து சென்ற அசைவால் குழந்தையின் தலைமேலே விழுந்து இறந்துவிட்டிருந்த காட்சியைக் காவலர்கள் கண்டு அரசனிடம் கூறினார்கள்.

குழந்தை செத்துப் போனதை அறிந்த அரசன் மிகவும் வேதனைப் பட்டான். ஆனாலும், அந்த சோதிடச் சிறுவன் கூறியபடி நடந்ததால், அன்று முதல் அவனையே தனது அரசவை கணியனாக நியமித்தார். பன்றி படிமத்தால் குழந்தை சாவான் என்று கூறியதால், மிகிராகுலன் என்ற பெயருடையவன் வராக மிகரன் என்று அழைக்கப்பட்டான். வராகம் என்றால் பன்றி என்ற ஓர் பொருளும் உண்டல்லவா? அதனால் அப்பெயர் அவனுக்கு ஏற்பட்டது.

கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் நடந்ததாகக் கூறப்பட்ட இந்தக் கதையான வராக லீலைக்குரிய ஆதாரம் ஏதுமில்லை. என்றாலும், கிரேக்க நாட்டில் கி.மு.559-ல் நடந்ததாகக் கூறப்படும் வராக லீலையின் அவதாரமாக இந்தியப் புராணம் புனையப்பட்டது என்பதுதான் உண்மையோ! சிந்தியுங்கள்.

## 11. சிறுத்தொண்டரும் - சிவகவியும்!

ஹிராடெடஸ் கூறுகின்ற இந்த வரலாற்றுச் சம்பவம் போக, குரோசஸ் என்ற மன்னனின் கடைசிக் காலம் எவ்வாறு கல்லறையானது என்பதையும் படிப்போம்.

குரோசசுக்கு சிறு வயதில் ஒரு மகன் இருந்தான். குரோசஸ் கண்ட கனவுப்படி, பன்றியின் பொம்மை அந்தச் சிறுவனின் மேல் விழுந்தபோது மண்டை உடைந்து மாண்டான் என்பதை மேலே பார்த்தோம்.

அதே குரோசஸ் மன்னனுக்கு, இரண்டாவது மகன் ஒருவன் இருந்தான். அவன் ஊமை! வாய் பேசாதவன்! அக்குறை ஒன்றே ஒன்றைத் தவிர மற்ற எல்லா மனிதநேய இலக்கணங்களும் உடைய அழகன்! அந்த ஊமை மகன் வளர்ந்து வாலிப நிலை வந்தபோது பாவம்- மன்னன் குரோசஸ், தனது இறுதிக் காலத்தில் சிறையில் வாழும் பரிதாப நிலையில் தாழ்ந்து விட்டார்.

பாரசீகப் போர் வீரன் ஒருவன் வாளேந்திக் கொண்டு போரில் தோல்வி கண்டதால் குரோசசை வெட்டுவதற்குக் கோபாவேசமாக ஓடிவந்தான். அவன் அடக்க முடியா வெறிவேகத் தோடு வருவதைக் கண்ட குரோசஸ், எல்லாத் தடுப்புக் கலைகளும் நன்கு தெரிந்தும் கூட; தடுக்காமல் ஊமைபோல தளர்ந்து நின்று கொண்டிருந்தார். ஏன் அவ்வாறு இருந்து விட்டார் அவர்? மோசமான வாழ்க்கைப் பூகம்பத்தின் பிளவுக்குப் பலியான பிறகு, இனி வாழ்ந்தால் என்ன? செத்தால் என்ன? என்ற முடிவுக்கு அவர் வந்த பிறகு நாம் ஏன் வெட்ட வருபவனின் வாளைத் தடுக்க வேண்டும்? என்பதன் விரக்தியிலே அவர் வீழ்ந்துவிட்டார்!

இந்தப் பயங்கரக் காட்சியை, குரோசஸ் ஊமை மகன் பார்த்து விட்டான். அவன் உடல் நடு நடுங்கியது; கண்கள் படபடத்தன; நெஞ்சிலே நெருப்ப பற்றி, தனது உடலையே எரிப்பது போன்ற மோசமான கனல் சூட்டால் தவித்தான்; துடித்தான்; படபடத்தான்; ''ஐயோ, ஐயோ குரோசசைக் கொன்று விடாதே,கொன்று விடாதே' என்று ஊமை கத்தினான்; அலறினான்; பதறினான்; கண்ணீர் வடித்தான் கதறினான்!

''ஐயா; குரோசசைக் கொன்று விடாதே'' என்று, ஊமை வாய்திறந்து முதன் முதலில் பேசிய கூப்பாட்டுக் கூச்சலைக் கேட்டு அங்கே கூடி இருந்தோர் ஆச்சர்யப்பட்டார்கள்! அன்று முதல் ஊமை தனது இறுதிக் காலம் வரை நன்றாகப் பேசினான்!

ஊமை எவ்வாறு திடீரென்றுப் பேசினான் என்ற வியப்புணர்ச்சி ஏற்பட்டு, மகிழ்ச்சி வெள்ளத்தைப் பாய்ச்சியது மக்களிடையே! தனது தந்தைக் குரோசசை, எங்கே கொன்று விடுவானோ என்று அவனது நெஞ்சும் நாவும் இதயமும் படபடத்து, அதிர்ச்சி நெருக்கடியின் அதிர்வுகளால் ஊமை பேசத் தொடங்கி விட்டான். இதற்கு அதிர்ச்சி சிகிச்சை என்று மருத்துவ உலகம் பெயரிடுகிறது.

குரோசசை இரும்புச் சங்கிலியால் இறுகப் பிணைத்துப் பாரசீக மன்னர் முன்பு கையிலே விலங்குடன் நிற்க வைத்தார்கள். அப்போது பதினான்கு லிடியா வாலிபர்கள் தீயிட்டுக் கொளுத்துவதற்காகத் தயாராக நிறுத்தப்பட்டிருந்தார்கள். பிறகு சிறுவர்களுக்காக அடுக்கி வைக்கப்பட்ட சிதைகளின் நடுவிலே சிறுவர்களுடன் குரோசிசையும் சிதையிலே படுக்க வைத்தது பாரசீக அரசு! இறுதியாக, ஏந்திய தீப் பந்தம் கொண்டு சிதைகளுக்கு எரியூட்ட வேண்டிய நேரத்தில் குரோசஸ், ‘சோலான், சோலான்’ என்று கூவினான்! மீண்டும் ஓங்கி உரக்கக் கூவினான்! பிறகு குரோசஸ்.

> ''எந்த மனிதனும் தனக்குச் சாவுவரும் வரை
> மகிழ்ச்சியாக இருப்பதில்லை. சாவே, ஒருமனிதனின்
> கடைசி இன்பம்''

-என்று, உரக்கப் பேசினான்! மீண்டும் சோலான், சோலான் என்று கை கூப்பி வணைங்கினான்!

மன்னன் சைரஸ் அந்தக் கண்ணீர்க் கூக் குரலைக் கேட்டான்! சோலான் என்பவன் யார் என்று கேட்டான்! கூடியிருந்தவர்களை எல்லாம் நோக்கி, உங்களுக்குத் தெரியுமா? யார் அந்த சோலான்? என்றான். எந்த விதப் பதிலும் எவரிடமும் இருந்து வராததால், மீண்டும் குரோசசையே கேட்டான் அந்த மன்னன்! அப்போது குரோசஸ்:

"சோலான், நீ உலகில் உள்ள ஒவ்வொரு அரசனிடமும் பேசியிருக்க வேண்டும். எனக்கு எல்லையற்ற் செல்வம் இப்போது இருந்தால், எல்லாவற்றையும் அவருக்கே வாரி வாரிக் கொடுத்திருப்பேன்! சோலான், சோலான் என்றார்.

மறுபடியும் அந்தப் பாரசீக மன்னன் சோலான் யார்? என்று கேட்ட போது அடுக்கிவைக்கப்பட்டிருந்த அந்தச் சிதை மேலே படுத்துக் கொண்டே குரோசஸ் அந்த மன்னனுக்குப் பதில் கூறினார். சோலான் என்னென்ன கூறினாயோ அதெல்லாம் நடந்தேறி இருக்கின்றன என்று குரோசஸ் விளக்கமாகவே கம்பீரத்தோடு பேசினார்.

அடுக்கி வைக்கப் பட்ட குரோசசின் சிதையின் நான்கு பக்கங்களிலும் நெருப்பு எரியும் வேளையில் அரசன் சைரசுக்கு உடனே ஓர் எண்ணம் திடீரென்று வந்தது. "இவன் என்னைப் போல் எத்தனையோ நாடுகளை வென்றவன்; ஒரு காலத்தில் பேரரசு ஒன்றுக்கு மன்னனாக வாழ்ந்தவன்; மனிதரில் யார்தான் நிலையாக வாழ்பவர்? ஏதோ எனக்கு நல்ல நேரம், அதனால் இவனைச் சிறைப் பிடித்தேன்! ஏன், நானேகூட இறந்து போயிருக்கலாம் இல்லையா? எனவே, மனிதர்கள் என்ன செய்வார்கள்; அவர்களை ஊழ் என்ற ஒன்று ஆட்டிப் படைக்கும் போது?" என்பதே அந்தத் திடீர் எண்ணம்!

மன்னன், காவலர்களை உடனே கூப்பிட்டான்; எரிகின்ற சிதைகளை உடனே தண்ணீரைக் கொட்டி அணையுங்கள் என்று உரக்க ஓங்கிக் கூப்பாடு போட்டுக் கத்திக் கட்டளையிட்டான்!

சைரஸ் அரசர் தனது எண்ணத்தைக் கூறி முடிப்பதற்குள், நெருப்பு பலமாக எரிய ஆரம்பித்து விட்டது. உடனே குரோசஸ், அப்பொலோ தெய்வமே! நான் உனக்குக் கொடுத்த தெய்வக்

கொடையில் ஒன்றாவது உனக்குப் பிடித்திருந்தால், எரிகின்ற இந்தத் தீயிலே இருந்து என்னைக் காப்பாற்று'' என்று, அப்பொலோ கடவுளை வேண்டினார். அந்த வேண்டு கோளைக் கேட்ட இந்தத் தெய்வம்; கருணையோடு, பெரு மழை ஒன்றைப் பொழிந்ததால், எரியும் சிதை அணைந்து விட்டது. மன்னன் ஆச்சரியப்பட்டுக் குரோசசைத் தழுவிக் கொண்டான்.

குரோசஸ் ஒரு நீதிமான், நன்னெறியாளர், நல்ல மனிதர்; தெய்வ உணர்வு சுரக்கும் ஆன்மிக இதயம் கொண்டவர் என்று பாரசீக மன்னன் சைரஸ் நம்பினார்! குரோசசைப் பார்த்து, 'ஐயா, என் நாட்டின் மீது படையெடுக்குமாறு உமக்குக் கூறியது யார்?'' என்று கேட்டார்.

''மன்னா, யாருமிலர், கிரேக்கத் தெய்வங்கள்தான் உன்மீது படையெடுக்க ஆணையிட்டனர். இந்த யுத்தத்திற்குக் காரணம் அவர்கள் தான். அமைதியைத்தான் ஒருவன் தேடுவானே தவிர, போரை எவனும் நாடமாட்டான். அமைதிக் காலத்தில் மகன், தனது தந்தைக்குக் கல்லறை எழுப்புவான்; போர்க் காலத்தில்தான் தந்தை தனது மகனுக்குக் கல்லறைக் கட்டுவான். இவ்வாறு, நடப்பதுதான் தெய்வக் கட்டளை; விருப்பமும் கூட'' என்றார் குரோசஸ்.

'ஐயா, தாங்கள் எனக்கு ஏதாவது அறிவுரை கூறுவீர்களா?' என்று அந்த அரசர் குரோசசைக்கேட்டார். அப்போது நெஞ்சும் நெகிழ குரோசஸ்; மன்னா, நான் தங்களுடைய அடிமை. இருந்தாலும், நீங்களே என்னிடம் கேட்டுக் கொண்டதால் கூறுகிறேன்.

''சார்டிஸ் நகரச் செல்வங்களை உமது போர்வீரர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். எவன் அவர்களுக்குள் அதிகமாகக் கொள்ளையடிக்கின்றானோ, அவன் உங்களைப் பழிவாங்குவான். அவன் கொள்ளையடித்த பொருட்களை தங்களிடம் சேர்க்கமாட்டான்; ஏமாற்றுவான். எனவே, ஒன்று

மட்டும் செய்யுங்கள். கொள்ளையடித்த பொருள்களை ஒப்படைக்கும் போது, அதில் பத்தில் ஒரு பாகம் ஜியுஸ் கடவுளுக்குக் கொடுக்கப்படும்! என்று ஓர் அறிக்கை விடுங்கள். கடவுள் நம்மைத் தண்டித்து விடுவாரோ என்ற பயத்தால், எல்லாப் பொருட்களையும் உங்களிடம் சேர்த்து விடுவான். பிறகு அவற்றிலே இருந்து பத்தில் ஒரு பகுதியை ஜீயுஸ் கடவுளுக்குத் தெய்வக் கொடையாகக் கொடுத்து விடுங்கள்'' என்றார் குரோசஸ். மன்னனும் அவ்வாறே உத்தரவை அனுப்பி வைத்தான்.

மன்னன் சைரஸ் குரோசஸ் அறிவுரையைக் கேட்டு முழு மகிழ்ச்சி அடைந்தார். கொள்ளைப் பொருள்கள் ஒழுங்காக வந்து சேர்ந்தன. கொள்ளை வந்த பொருள்களில் ஒரு பகுதியையும் குரோசஸ் பிணைக்கப்பட்ட இரும்புச் சங்கிலியையும் அவர் வேண்டிக் கொண்டதற்கு ஏற்றவாறு டெல்பி கோயிலுக்கு மன்னர் சைரஸ் அனுப்பி வைத்தார்.

அப்பொழுது டெல்பி கோயிலில் எழுந்த அசரீரி, ''இங்கு கடவுளர்கள் விதிவிலக்கற்றவர்களே! அவர்களும் துன்பத்தை ஏற்றே ஆக வேண்டும். சார்டிஸ் நகரம், குரோசசின் மகன்கள் காலத்தில் இழக்கப் பட்டிருக்கலாம். அப்படியில்லாமல், குரோசசே தம் நகர அழிவைக் காண வேண்டுமா என்றால், யாரும் கடவுள் விருப்பத்தை தடுத்து நிறுத்தி விட முடியாது. குரோசசை எரிநெருப்பிலே இருந்து காப்பாற்றியதும் அதே கடவுளே தானே! என்றது.

குரோசஸ், பலவகைப் பரிசுப் பொருட்களை கிரேக்கக் கோயிலுக்கு அனுப்பியதுடன், ஒரு தங்கப் பசுவையும், தங்க ஈட்டியையும், சைரஸ் மன்னனால் தான் பிணைக்கப்பட்ட இரும்புச் சங்கிலியையும், மற்றும் பல விலை உயர்ந்த பொருட்களையும் அனுப்பிவைத்தார்.

இந்தியத் தெய்வங்களான இராமர், கிருஷ்ணர், சூரியன், இந்திரன் ஆகியவர்களின் குணச் சக்திகள் ஒன்று சேர்ந்த ஒரு கலப்புக் கடவுளாக அப்பொலோ தெய்வம் உருவாக்கப் பட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

குரோசஸ், அப்பொலோ கடவுளிடம் ஆழ்ந்த பக்தியுடையவர். அதனால்தான் அவர் சிதையிலே படுத்துப் பிரார்த்தனை செய்ததும், அந்தத் தெய்வம் கருணை கொண்டு மழையைப் பொழிந்தார். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது நமது முதுமொழி அல்லவா? பாஞ்சாலி பாரதத்தில் துகிலுரியப் பட்டபோது, அவள் கிருஷ்ணா, கிருஷ்ணா என்று கூவி முறையிட்டபோது துச்சாதனால் அவிழ்க்கப் பட்ட சேலை வளர்ந்து கொண்டே இருக்கவில்லையா!

பாரசீகப் பேரரசின் அரசர்களுள் ஒருவரான அஸ்டியகெஸ் கண்ட ஒரு கனவிற்கு, தம்பேரன் ஆசியாவின் சக்கரவர்த்தியாக வருவான் என்ற விளக்கம் தரப்பட்டது. ஆகவே, அந்தக் குழந்தையைக் கொன்று விடும்படி ஹார்பகஸ் என்ற தனது தளபதிக்குக் கட்டளையிட்டான். அதாவது, பாரதக் கதையில் கம்சன் கிருஷ்ணன் தனக்கு எதிரி என்று அசரீரி கூறிய வாக்குக் கேற்றவாறு. அவன் நாட்டில் பிறக்கும் குழந்தைகளைக் கொல்லு மாறு உத்தரவிட்டதைப் போல.

இயேசு பெருமான் பிறந்த போது இரண்டாயிரம் குழந்தைகளை யூத நாட்டிலே கொன்றதைப் போல இந்தச் சம்பவங்கள் எல்லாம் அஸ்டியகசுக்குப் பின்னாலே நடந்த சம்பவங்களாகும். ஆனால், இவற்றுக் கெல்லாம் மூலக் கருவாக அகஸ்டியஸ் வழிகாட்டினான் என்றே நினைக்க வேண்டியுள்ளது.

ஹார்பகஸ் என்ற தளபதி அஸ்டியகஸ் கட்டளைப்படி இறந்த ஒரு குழந்தையை ஆட்டிடையனிடம் பெற்று, அதை ஒரு கூடையில் வைத்து மூடி, படகில் வைத்து ஆற்றில் மிதக்க விட்டுவிட்டான்.

அதற்குப் பிறகு, ஹார்பகஸ் விட்ட படகை ஓர் ஆட்டிடையன் கண்டு குழந்தையைக் காப்பாற்றி வளர்த்தான்.

கி.மு. 569 ஆம் ஆண்டின் போது, குழந்தையைக் காப்பாற்றிய் மித்ரடேடிஸ் என்ற அந்த ஆட்டிடையன் அங்கு தற்செயலாக வந்து இறந்த தனது குழந்தையை ஹார்பகசிடம் தந்து அரசனின் பேரனைப் பெற்றுக் கொண்டு போய் பத்து வயது வரை வளர்த்தான். இறந்த குழந்தையை ஹார்பகஸ் ஒரு படகிலே பெட்டியில் வைத்து மூடி மிதக்க விட்டு விட்டான்.

இறந்த ஆட்டிடையன் குழந்தையை ஹார்பகஸ் வாளால் வெட்டி அதை அஸ்டிய கெசுக்குக் காட்டி ஏமாற்றிவிட்டான். கருணை உள்ளம் கொண்டும், சிறு குழந்தையை வெட்டிவிட மனமில்லாமலும் அவன் அவ்வாறு செய்தானே அல்லாமல் அரசனை வேண்டும் என்றே ஏமாற்றுவதற்காகச் செய்யவில்லை. ஆனால், மன்னன், தன்னை ஹார்பகஸ் ஏமாற்றி விட்டதாகத் தவறாக எண்ணி விட்டான்.

இவ்வாறு தன்னை தளபதி ஏமாற்றியதற்காக, ஹார்பகஸின் மகனையே கொன்று, அவனுக்கே அரண்மனையில் அஸ்டிகெஸ், பிள்ளைக் கறியமுது விருந்து வைத்தான். இந்தக் கொடூரச் செயல் நமது பெரிய புராணத்தில் வரும் சிறுதொண்டர் நாயனார் தனது குழந்தையையே வெட்டிப் பிள்ளைக் கறி விருந்து சிவபெருமானுக்கே வைத்த சம்பவத்தை நினைவூட்டுகின்றது.

அஸ்டியகஸ் தனது மகனைக் கொன்று தனக்கே விருந்து வைத்ததைக் கண்டு ஹார்பகஸ் மனம் பதறி, மன்னனைப் பழிக்குப் பழிவாங்கிட வஞ்சம் கொண்டு, சைரஸ் மன்னன் படைக்கு தலைமையேற்று, அஸ்டியகெசைத் தோற்கடித்துச் சிறைப் பிடித்து அடிமையாக்கி, சிறையிலேயே அவனைச் சாக வைத்தான் என்று ஹிராடெடஸ் தனது வரலாற்றுக் குறிப்புகளில் கூறியுள்ளார்.

# 12. உலக மக்கள் இடையே தமிழர் பழக்க வழக்கங்கள்

உலக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தியர்களுடைய, குறிப்பாகத் தமிழர்களுடைய பழக்க வழக்கங்களை ஹிராடெடஸ் 'வரலாறுகள்' என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

★ கோயில்களில், குறிப்பாகச் சில அம்மன் கோயில்களில் குறிகேட்டு, சம்மதம் பெற்று அதன் வழி நடப்பது. இது அருள் வேட்டல் என்ற பழக்கத்தின் சாயலாகும். தெய்வ அருளால், யானை எவருக்கு மாலை அணிவிக்கின்றதோ அவரை அரசாராக ஏற்றுக் கொள்ளும் பழக்கம்.

★ தமிழர்களின் பழக்கம் கனவுக்குப் பலன் கூறுவது. நல்ல கனவாக இருந்தால் அதைப் பெரியோர்களிடம் கூறி, அவர்களிடம் அறிவுரை, பெறுதல். கெட்ட கனவாக இருந்தால் முகத்தைக் கழுவிக் கொண்டு, கடவுளை வணங்கி, மீண்டும் உறக்கம் கொள்ளுவது. தீய கனவுகளுக்கு ஏதாவது சடங்குகள் செய்வதானால் அவற்றைச் செய்து தீக் கனாவுக்குப் பரிகாரம் காண்பது.

★ போர்க் காலங்களிலும், சுயம்வரம் நேரத்திலும் பெண்களைக் கவர்ந்து சென்று திருமணம் செய்து கொள்வது. இதற்குரிய சான்று வடநாட்டில் பிருதிவி ராஜ், ராணி சம்யுக்தை சம்பவங்கள்.

★ இந்திய நாட்டு ரிஷிகள், சாபம் கொடுக்கும் முறை. எடுத்துக்காட்டாக, பிறன் மனை புகுந்த தேவேந்திரனைக் கௌதம் மகரிஷி, இந்திரன் உடலெல்லாம் பெண் யோனிகளாகக் கடவது என்று சாபம் கொடுத்துள்ளது.

★ பெரிய புராணம் என்ற நூலை எழுதிய சேக்கிழார் பெருமான், பிள்ளைக்கறி அமுதை சிவபிரானுக்காகக் கறி சமைத்து விருந்து படைத்த வரலாறை எழுதியிருப்பது; வரலாற்றின் ஒரு சாயலே; குறிப்பாக, ஹிராடெடஸ் எழுதிய குறிப்பின் சாயலைச் சார்ந்துள்ளது.

★ தமிழ் நாட்டுக்கோயில்களில் தினந்தோறும் ஆறுகால பூசைகள் நடப்பது; தேர், திருவிழா, இறை ஊர்வலம், மக்கட் கூட்டம் கூடுதல் போன்றவை. சிலை செய்தல் உருவ வழிபாடு, கோயில் கட்டுதல், தமிழர்களின் பழம் பெரும் கால வழக்கேயாகும். எடுத்துக் காட்டாக, தஞ்சைப் பெரியகோயில், மதுரை மீனாட்சி கோயில், மாமல்லபுரம் சிற்பக் காட்சிகள் போன்ற எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன.

★ தமிழ் நாட்டு ஆலயங்களில், ஐந்து கருவிகளில் புல்லாங் குழல் ஊதுதலும் ஓர் இசையாக நடந்து கொண்டிருக்கின்றது.

★ நாம் பிறந்த நாடு வாழ, நாமும் வாழ்வோம் என்பது தமிழ் மக்களின் சிறந்த ஒரு கொள்கையே ஆகும்.

★ கடவுள், சிறு தெய்வங்கள் கிராம தேதைகள் எல்லாம் அவைகட்குப் படைக்கும் படையல்களை நேரில் வந்து உண்பதானது தமிழர்களின் சிறப்பான கருத்தாகவும், மரபாகவும் இன்றும் உள்ளது.

★ தமிழர்களில் பெரும் பான்மையானவர்கள், குறிப்பாகக் கிராம மக்கள், விலங்கினங்களுக்கு அதாவது பசு, நாய், காக்கை போன்றவைகளுக்கு பிடிசோறு அல்லது வயிறார சோறு வைப்பது உண்டு. மாட்டுப் பொங்கலன்று தமிழர்கள் மாடு கன்றுகளுக்கு உணவை வலிய ஊட்டிய பின்பே தாம் உண்பார்கள். பிறநாட்களில் அவைகட்குரிய சோற்றுணவை ஒதுக்கியும் வைப்பார்கள்.

★ மற்றும் சில தமிழ் மக்கள் கொஞ்சமேனும் உணவு இறையாமல் முழுவதுமாக உண்பார்கள். இதற்கு எடுத்துக் காட்டு வள்ளுவர் வாழ்க்கை.

★ குடிபோதையில் தமிழர்கள் இருக்கும் போது எந்தப் பிரச்னைகளுக்கும் தீர்வு காண மாட்டார்கள்.

★ கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பாரசீகம், கிரேக்கம் போன்ற நாடுகளுக்கு கடல் கடந்து சென்றது.

★ தமிழ் நாட்டில் சூரிய வணக்கமும், வழிபாடும் செய்வதுண்டு, இது பாரசீக மக்கள் இடையேயும் சென்று பரவியுள்ளன. மித்திரன், மித்ரா என்றால் சூரியன் என்று நாமதீப நிகண்டும், வேதங்களும், அபிதான சிந்தாமணி போன்,ற நூல்களும் கூறுகின்றன.

★ தெய்வங்களுக்கு தூப, தீப நைவேத்யம் செய்வது பற்றி ஹிராடெடஸ் கூறுகிறார். கிரேக்க நட்டில் இவை உண்டு என்றும், பாரசீகத்தில் இல்லை என்றும் குறிப்பிடுகிறார். ஆனால், இது தமிழர் பண்பாடு கோயிலில் பலி பீடம் அமைத்தால், புல்லாங்குழல் ஊதுதல், மாலைகளை சிலைகளுக்கு அணிவித்தல், சோற்றைப் பலி பீடத்தின் மேல் இறைத்தல் ஆகியன எல்லாம் தமிழர் பண்பாடுகளே. இவை கடல் கடந்து சென்ற பனையேறிகளாகிய பினீசியர்களால் கடைப்பிடிக்கப் பட்டு, பிறகு கிரேக்க நாட்டில் புகுத்தப்பட்டன என்கிறார் ஹிராடெடஸ்.

கடவுளுக்குப் பலியிடுதல் பற்றி, 'மலையுறை கடவுள் குலுமுதல் வழுத்திக், நேம்பலிச் செய்தவீரர் நறுங்கையள்'' என்று ஐங்குறு நூறு கூறுகின்றது. மற்றும் நற்றிணை 343, அகநானூறு 166, பதிற்றுப் பத்து 30, போன்ற பாடல்கள் தெய்வத்துக்குப் பலியிடும் பழக்க வழக்கம் பற்றிப் பேசுகின்றன.

★ தமிழர்கள் சாஷ்டாங்கமாக விழுந்து வணக்கம் செய்வதுண்டு. அதாவது, இரண்டு கைகள், இரு முழங்கால்கள்,

இருதோள்கள், மார்பு, நெற்றி ஆகிய எட்டு உறுப்புக்களும் தரையில் படும்படி வணங்குவதையே சாஷ்டாங்க நமஸ்காரம் என்பர் தமிழர். இந்த முறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன என்கிறார் ஹிராடெடஸ்.

★ பாரசீகர்கள் தங்கள் பெயரின் இறுதியில் 'இஸ்' எனும் எழுத்தைச் சேர்த்துக் கொண்டு, அவர்கள் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்பதைக் காட்டிக் கொள்வர் என்கிறார் ஹிராடெடஸ் எடுத்துக்காட்டாக, அரியாண்டில், அர்டமிஸ், சாக்ரடிஸ், அரசமிஸ், டையோனிசஸ், ஹிராடெடஸ் என்றெல்லாம் கூறலாம்.

ஆனால் தமிழர்கள் அர் என்ற எழுத்துக்களைச் சேர்த்துக் கொள்ளும் பழக்கம் உடையவர்கள். குறிப்பாக ஆதித்தினார். பரிதியார், இலக்குவனார், சிலம்பொலியார், நன்னார் என்று குறிப்பிடலாம். வடவாரியர் தமிழகம் வந்தேறிய பின்பு, கவுண்டர், செட்டியார், ஆசாரியார், ஆச்சாரியார், ஐயர், அய்யங்கார், பறையனார், கோமுட்டியார் என்றெல்லாம் மாறி, வர்ணாசிரமப் பிரிவுகள் ஆதிக்கத்துள் அமிழ்க்கப் பட்டு விட்டன.

★ உயிரே போனாலும் பொய் பேசுதல் கூடாது என்பது பாரசீகம், கிரேக்கம் பண்பாடுகள். ஆனால் பேசாமல் இருக்கிறார்களா? இருக்க முடியாது. காரணம், மனிதக் குணம் எப்போதும் மாறி மாறி ஆட்டமிடும் குரங்கு மனம்! உடையது. அடக்குவது பெரும் சிரமம்.

இதை நன்கு உணர்ந்த வள்ளுவர் பெருமான், ஒரு விதிவிலக்கைக் கொடுத்துள்ளார். அதாவது

''பொய்ம்மையும் வாய்மை யிடத்து புரை தீர்ந்த
நன்மை பயக்கு மெனின்''

(குறள் 292)

என்ற திருக்குறாளால், பொய்யே சொல்லக் கூடாது, வாய்மையே பேணு என்று கூறிய தெய்வப் புலவர் மனிதன் தன்னையறியாமலே பொய் கூறினாலும் கூறிவிடுவானோ என்பதற்காக, அப்படிக் கூறி பொய் புரை தீர்ந்த நன்மை பயக்குமானால் அவனை மன்னிக்கலாம் என்று ஓர் விதிவிலக்கும் அளித்துள்ளார்.

★ ஆடைகள் அணியும் முறைகளைப் பற்றி ஹிராடெடஸ் கூறும்போது, பாபிலோனியர்களும், கிரேக்கர்களும், பாரசீகர் களும் தமிழர்கள் அணிந்து வந்த உடைகளையே அணிந்தனர் என்கிறார். அதாவது கால்வரை தொங்கும் ஆடை அல்லது வேட்டி, தலைமயிரை நீளமாகக் குடுமிபோல் வளர விட்டுப் போர்த்திக் கொள்ளல் போன்றவற்றைக் குறிப்பிடுகிறார் அவர். கி.மு.469 முதல் 399 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த தத்துவ நாவலர் சாக்ரடிஸ் தமிழர் உடைகளையே அணிந்திருந்தார் என்று கிரேக்க வரலாறு கூறுகின்றது.

★ ஆணும் - பெண்ணும் சிற்றின்பத்தில் விளையாடிய பிறகு, அவர்கள் குளித்துவிட்ட பிறகே பாத்திரங்களையும், துணிமணி களையும் தொடவேண்டும் என்பது இன்றும் என்றுமுள்ள தமிழர் பண்பாடு. இந்தப் பண்பாடும் பழக்க வழக்கங்களும் பினீசியர்கள் என்ற தமிழர்களால் அஸ்ஸீரியா நாட்டிற்கும், பிறகு பாபிலோ னுக்கும், பின்னர் அங்கிருந்து கிரேக்கத்திற்கும் சென்று பரவியது.

★ பொட்டுக்கட்டி கோயிலுக்குப் பொதுவுடைமையாகும் பெண்கள் அயலாருடன் சேர்வதைப் பாவமாக ஏற்கப்படவில்லை. தெய்வத்துக்காக, கடவுள் தொண்டுகளுக்காக விடப்பட்ட அவர்களது உடலை தெய்வத்துக்கு அர்ப்பணிக்க வேண்டும். கடவுள் அப்பெண்களுக்கு மனித உருவிலேதான் வருவார். அதனால், கோயிலுக்கு வருபவனே கடவுள் உருவம் என்று ஏற்று அவர்கள் உடலின்பம் பெறுவார்கள். இது நாட்டுக்கு நாடு

வேறுபட்டுப் பின்பற்றப்படுகின்றது. ஆனால், கோயிலுக்கு வெளியே வந்ததும் எவ்வளவு பணம் கொடுத்தாலும் அவர்களை விலைக்கு வாங்க முடியாது. இது அப்பெண்களின் ஒழுக்கமன உறுதியைக் காட்டுகிறது. தேவதாசிகள் எனக் கூறப்பட்ட இவர்கள வாழ்க்கையை வளமாக்கிட தேவதாசி ஒழிப்புச் சட்டம் வந்து விட்டது. இந்தப் பழக்கம் சைப்ரஸ் தீவிலும் இருக்கிறது என்று ஹிராடெடஸ் கூறுகிறார்.

★ உலகம் எங்கும் உள்ள மக்கள், இடமிருந்து வலம்தான் எழுதிவந்தனர். ஆனால், எகிப்தியர் வலமிருந்து இடம் எழுதிவந்ததாக ஹிராடெடஸ் கூறுகிறார். இவ்வாறு வலமிருந்து இடம் எழுதும் பழக்கம் அரேபியர்களாலும், முஸ்லீம்களாலும் பிற்காலத்தில்தான் ஏற்பட்டன. சீனர்கள், ஜப்பானியர்கள் மேலிருந்து கீழாகவும், அராபியர்கள், முஸ்லீம்கள் வலமிருந்து இடமாகவும், இந்தியர்கள் தமிழர்கள், மற்ற நாட்டவர்கள் எல்லாரும் பொதுவாக இடம் இருந்து வலமாகவே எழுதி வருகின்றனர்.

★ எருது, சிவபெருமானுக்கு வாகனமாகும். எருதுவைக் காளை என்றும் நந்தி என்றும் தமிழ் இலக்கியங்களும், புராணங்களும் கூறுகின்றன. ஈஸ்வரன் கோயில்களில் எருது கோயிலின் முன்புறம் வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், அது தெய்வாம்சம் என்பதால்தான். இதே புனிதம், எகிப்தியர்களாலும், குறிப்பாக மெம்பிஸ் நகரத்தில் எருதுக்குத் தனி இடமே வசிக்கக் கட்டிதரப் படுகின்றது எருது பிறந்த நாளை அம் மக்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அதுபோலவே, எருது இறந்தாலும் அந்த நாள் துக்க நாளாக நாடு முழுவதும் கொண்டாடப் படுகிறது. அடுத்து ஒரு புனிதமான எருதுத் தேர்வு செய்யப்படும் வரை துக்க நாளைக் கொண்டாடிய படியே இருப்பார்கள்.

தமிழ் நாட்டில் எருது, பசு, கன்று ஆகியவைகளைக்கு கொம்புகளை சீவி, வண்ணங்கள் அடித்து, தொப்பிகளை அதன்

கொம்புகளில் மாட்டி, கழுத்திலே மணியாரங்களைக் கட்டி, மஞ்சள் பூசி, குங்குமப் பொட்டிட்டு, ஆரத்தி எடுத்து, தூய தீபாராதனைகளைக் காட்டி புதுப் பானையிலிட்டு பொங்கல், கரும்பு இவற்றை வற்புறுத்தி வாயில் ஊட்டி, மாலையானதும் மந்தைக்கு ஓட்டிக் காட்சிப் பொருளாக்கி, தமிழர் வீரத்தை நிலை நாட்டும் மாடுபிடி சண்டையெனும் ஏறுதழுவுதல் நடத்தி, வெற்றி பெறுபவனுக்கும் வீரத் திருவிழாவாகக் கொண்டாடு எருது களுக்குப் பெருமையும் புகழும் உண்டாக்கி மகிழ்வார்கள். இந்த நாளை மாட்டுப் பொங்கல் விழா, ஏறுதழுவல் விழா, வீர விளையாட்டு விழா, என்றெல்லாம் கொண்டாடி மகிழ்வார்கள். எருதுவுக்கு தமிழ்நாட்டிலே புனிதமும் உண்டு, தெய்வாம்சம் கருதும் சிறப்பும் உண்டு. எனவே இந்தப் புனிதவிழா எகிப்துக்கும், மெம்பிஸ் நகருக்கும் அங்கிருந்து மற்ற நாடுகளுக்கும் பரவியது. இந்த எருது விழா தமிழரது பண்பாட்டு விழாவாகும். இந்த விழாவை ஹிராடெடஸ் எகிப்து பற்றிக் கூறும் போது குறிப்பிடுகிறார்.

★ மாரடித்துக் கொண்டு துக்கம் கொண்டாடாத சாவு வீடுகள் தமிழ்நாட்டில் இல்லை; ஏன், இந்தியாவிலேயும் இல்லை எனலாம். மாரடைத்து அழுவது துக்கத்தின் அறிகுறி. பிணம் விழுந்த வீட்டின் அடையாளம். இது நெடுங்காலமாக தமிழ் நாட்டில் இருந்து வரும் வழக்கமாகும்.

★ ஆலயங்கள் புனிதமான இடங்கள். அந்த இடத்தில் ஆண் பெண் சிற்றின்பம் கூடாது என்பது தமிழ் நாட்டினரின் மிகச் சிறந்த கொள்கைகளுள் ஒன்றாகும். அதனால்தான், கோயிலுக்குள் தெய்வ வழிவாடு செய்யச் செல்லும் போது, கை, கால், முகங்களை கழுவிக் கொண்டு போவது இன்றுமுள்ள வழக்கமாகும்.

★ தென் எகிப்து நாட்டில், பெலூஷியம் அருகில் டாம்ளே என்ற ஊர் இருந்தது. இங்கு தன் அண்ணனை - அரசரை - ஓர் அறையில் வைத்து, அதைச் சுற்றிலும் தீ மூட்டி எரித்தார்கள். அதுபோலவே,

பாண்டவர்களை கொல்ல அரக்கு மாளிகையைத் துரியோதனன் கட்டி நெருப்பு மூட்டியதாக மகாபாரம் கூறுகிறது. இந்த இரண்டிற்கு முள்ள நிகழ்ச்சிகளில், அரச குடும்பப் பொறாமைகளில் எவ்வளவு ஒற்றுமை காணப்படுகின்றது. கிரேக்கமும் இந்தியாவும் பரிமாறிக் கொண்ட கதைகளுள் இதுவும் ஒன்று.

★ கார்த்தேஜியினியர், கார்த்தேஜ் எனும் குடியிருப்பு பினீசியர்களால் வட ஆப்பிரிக்காவில், மத்திய தரைக் கடலை யொட்டி ஏற்படுத்தப்பட்டது. ரோமுலஸ் என்பவரால், ரோம் நகர் உருவாக்கப்படுவதற்கு, கி.மு. 753 ஆம் ஆண்டில் சரியாக 100 ஆண்டுகளுக்கு முன், அதாவது கி.மு.853 ஆம் ஆண்டில் கார்த்தேஜ் குடியிருப்பு நிர்மாணிக்கப்பட்டது. அதன் முதல் பெயர் போஸ்ரா என்று வழங்கப்பட்டது. போஸ்ரா என்றால் கோட்டை அல்லது அரண் என்று பொருள்.

பினீசிரியர்கள் கடலைக் கடக்கப் பரிசில் பயன்படுத்தினர். அந்த பரிசில் தென்னை. பனை மரங்களால் ஆனது. பரிசிலில் சென்று புதிய குடியிருப்பை ஏற்படுத்திய காரணத்தால் அந்த நகரம் போர்சோ என்று பினீசிய மொழியில் வழங்கப்பட்டது. அதுவே போஸ்ரா என்று மருவி, கோட்டையையும் அரணையும் குறிப்பிடு வதாயிற்று. எனவே, போஸ்ரா போர்சா இவற்றுக்குத் தமிழ் வேர்ச் சொல் பரிசு, பரிசல் என்பதே. பரிசல் என்றால் தெப்பம், ஓடம் என்பது பொருள். பரிசு என்றால் சிற்றோடம்.

★ தமிழர்கள் கோழி முதலிய சிறிய விலங்குகளின் கழுத்தைத் திருகியே பலியிடுவர்.

★ பெரிய விலங்குகளை அதற்கான பாறைகளில் வைத்து, கத்தியால் கழுத்தை வெட்டிவிடுவார்கள். எருமை, பன்றி, ஆடு முதலியவை பலியிடப்படுவனபோல.

★ தமிழர் அகழிகளைக் கோட்டையைச் சுற்றி வெட்டி, நீர் நிரப்பி அதனுள் முதலைகளை வளர்த்தார்கள்.

★ தமிழக மன்னர்களும், பண்டைய குரு குல மாணவர்களும், விற்போர், வாட்போர், மற்போர் ஆகியவற்றைக் கற்றிருந்தார்கள். அரிச் சந்திரன் வரலாறு உண்மையைப் போற்றியது.

★ கடன் கொடுப்பார்கள் தமிழர்கள். திருப்பித் தர முடியா விட்டால் அதற்குத் தக்கத் தண்டனையைக் கொடுப்பார்கள் என்பதே அவர்களின் கொள்கை.

★ தம் சடலங்கள் கூட விலங்குகளுக்கு உணவாக வேண்டும், வீண்போகக் கூடாது என்பது தமிழ் நாட்டு சைனர்களின் எண்ணம்.

★ தமிழர்கள் தலைமயிரை நீளமாக வளர்த்தார்கள். தலைப்பாகையை அணிந்து கொள்வார்கள்.

★ திருமணப் பெண்களைத் தமிழர் பரிசம் கொடுத்து விலைக்குப் பெற்றார்கள்.

★ பண்டைத் தமிழர்கள், பொதுநல மருத்துவ விடுதிகளில் நோயாளிகளைக் கவனித்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்வார்கள். இது தமிழர்களின் பண்டைய பழக்கமாகும். இன்றும் அவ்வாறே செய்து வருகிறார்கள்.

★ தமிழர்கள் தங்களின் பெண்களின் கற்பபைப் பாதுகாத்து வந்தார்கள். இடைக் காலத்தில் தெய்வங்களுக்கு என்று சில பெண்கள் விடப்பட்டார்கள்.

★ தமிழ்நாட்டில் தமிழர் புதன் கிழமை, சனிக் கிழமைகளில் எண்ணெய் வைத்து தலை முழுகுவார்கள். எள்ளில் இருந்து பிழிந்த எண்ணெய்யினையே பயன்படுத்துவார்கள். வேட்டியையும், மேலங்கியையும் உடைகளாக அணிவது அவர்களது பழக்கமாகும்.

★ திருமணமான பெண்கள் தங்களது பெற்றோர்களைக் காப்பாற்ற வேண்டியதில்லை. கட்டாயப்படுத்தும் பழக்கம் இல்லை.

★ தமிழ் நாட்டுக் குருமார்கள் தங்களது தலை மயிரை மழித்தும் விடலாம்; வைத்துக் கொள்ளலாம்.

★ தமிழ் நாட்டில் இறந்தவரின் கூடப் பிறந்த ஆண்கள், மற்றும் தாயாதிகள் தலைமயிரை மழித்து விடுவார்கள்.

★ தமிழ் நாட்டினர் சாணத்தையும், களிமண்ணையும், தினை மாவையும் கைகளாலே பிசைகின்றனர்.

★ தமிழர்கள் மண்ணாலும், செம்பாலும், மரத்தாலும் செய்த பாத்திரங்களில் தண்ணீர் அருந்தி வந்தார்கள்.

★ தினந்தோறம் துணிகளைத் துவைத்துக் குளிப்பது அன்றும் இன்றும் தமிழர்கள் வழக்கமாகும்.

★ பெண்கள் ஒரே ஆடையைப் புடைவையாக உடுத்தி, அதில் ஒரு பகுதியால் தமது மார்பகத்தை மூடிக் கொண்டு வாழ்ந்தார்கள். இன்றும் தமிழ் நாட்டு வயல்களில் உழைக்கும் கிராமப் பெண்கள் அவ்வாறே வாழ்கிறார்கள், குளிக்கிறார்கள்.

★ வேள்வி, யாகம் நடக்கும் போது, தமிழ் நாட்டில் யாகம் செய்பவர்கள் சர்வாங்க ஷவரம் செய்து கொள்வது மரபு.

★ தமிழ்நாட்டில் மடாதிபதி, சந்நியாசிகள் முதலானோர் மூன்று வேளை குளிப்பார்கள். இது திரிகால ஸ்நானம் எனப்படும். காலை, மாலை, மதியம் இவ்வாறு செய்வார்கள்.

★ தமிழ் நாட்டில் கோயில் காளை என்றும், கோயில் மாடு என்றும், கோயில் ஆட்டுக் கடா என்றும் வழங்கப் படும் விலங்குகள் கடவுளுக்குக்கென்று விடப்படுகின்றன.

★ தீயில் நிவேதனப் பொருள் வேகும் போது மக்கள் மாரடித்துக் கொள்ளுதல். இறந்தோர்க்குச் செய்யப்படும் சடங்காக இதைச் செய்வார்கள். இறந்த பத்தாம் நாள் சடங்கில் இன்றும் பெண்கள் மாரடித்துக் கொண்டு அழுவது மரபு.

★ தமிழர்கள் பசுக்களை தெய்வமாகக் கொண்டாடுவார்கள். வாழ்த்துவதிலும் முதலில் பசுவைத்தான் வாழ்த்தினார்கள். இந்தியா முழுவதும் பசு போற்றப்பட்டு வருகிறது. 'கோ' எம்ரட்சணம், பசுவைக் காப்பாற்றுதல் என்ற வழக்கம் இன்று வரை மக்களால் செய்யப்பட்டு வருகிறது.

★ தமிழர்கள் தங்கள் தெய்வங்களுக்கு ஆடுகளைப் பலி கொடுத்தார்கள்.

★ தமிழர்கள் ஏழுதலைமுறை வரையில் தங்கள் குடும்பப் பெயர்களைப் பாதுகாத்து வந்தார்கள். தென்னிந்தியாவில் கேரளத்தில் உள்ள சிரியன் கிறித்துவர்கள் 2000 ஆண்டுகளின் பரம்பரைப் பஞ்சாங்கம் வைத்திருந்தார்கள்.

★ தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பேதி மருந்தைக் கொடுப்பது வழக்கம். முன்னர் பெரியவர்களும் மாதத்திற்கு ஒரு முறை பேதி மருந்து உட்கொள்ளும் வழக்கம் உண்டு.

★ தமிழர்கள் வயதானவர்களுக்கு மரியாதைக் கொடுத்து வந்தார்கள்; இன்றும் அதைப் பின் பற்றி வருகிறார்கள்.

★ தமிழர்கள், நாட்களுக்கு கடவுளர்களின் பெயரையே இட்டனர்; ஞாயிறு, சூரியன் என்றும், திங்களை, சந்திரன் என்றும் அழைத்து வந்தார்கள். தமிழர்கள் இறந்தவரின் பத்தாம் நாள் சடங்கின் போது எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் பழக்கம் கொண்டிருந்தார்கள்.

★ தமிழர்கள் கிளிகளுக்கும், குரங்குகளுக்கும் அணி செய்து அழகு பார்க்கும் வழக்கம் உடையவர்களாக இருந்தார்கள்.

★ சாரம் கட்டிப் பாறைகளை உயரே ஏற்றும் பழக்கம் தமிழர்களிடமும் இருந்தது. எடுத்துக் காட்டாக, தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுக்கு அவ்வாறு ஏற்றிய ஊரை இன்றும் சாரப்பள்ளம் என்று அழைத்து வருகிறார்கள்.

★ தமிழ் நாட்டுக் குழந்தைகளும், அவரவர் தெய்வங்களுக்கு பிரார்த்தனை செய்து தலைமயிரை மழித்து விடுதல், அன்று தொட்டு இன்று வரை உள்ள மரபு.

★ தமிழர்கள் முற்காலத்தில் தலையை மழித்துச் சிறிய குடுமி மட்டும் வைத்திருந்தார்கள். அதனால் சூரியன் வெப்பம் பட்டு எலும்பு கடினமாகும். இதை இயற்கை மருத்துவமாக எண்ணி னார்கள். சூரிய வெப்பம் படாத செடி, கொடிகள் வளருவதில்லை என்பது தமிழரின் எண்ணமாகும்.

★ யாராவது செய்கின்ற உதவியை தமிழர்கள் மறப்பதில்லை. எந்நன்றி கொன்றார்க்கும் உயவுண்டாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு' என்ற திருக்குறள் தமிழர் நெறியாக இன்றும் அன்றும் இருக்கின்றது.

★ ஆசியா, ஐரோப்பா, லிபியா என்று பெண்பால் பெயர்களை மேல் நாட்டார் வைத்துக் கொண்டார்கள். ஆனால் அதற்கு முன்பே தமிழர்கள் பூமியைப் பெண் என்றும், அவர்கள் நாட்டைத் தாய் நாடென்றும், இங்கே ஓடும் நதிகளைக் காவிரி, பொன்னி, யமுனை, கங்கை, கோதாவரி, சோனை என்றும் பெண்களது பெயரையிட்டே அழைத்த வருகிறார்கள்.

★ இந்திய நாட்டினர் வில்லையோ, மரக்கோலையோ கையில் வைத்துக் கொண்டு குறி, ஜோசியம் சொன்னதுபோல, தமிழ் நாட்டு மலைவாழ் பெண்கள் அந்த நாட்டின் பழக்கத்துக்கு முன்னரே, தங்கள் கையில் சிறுகோலை வைத்துக் கொண்டு குறி சொல்லும் வழக்கம் அன்றும் இன்றும் இருப்பதைப் பார்க்கலாம்.

★ தமிழ்ப் பெண்களும், இந்தியப் பெண்களும் இன்றும் தங்கள் கால்களில் கொலுசு, காப்பு அணிந்து கொள்ளும் பழக்கத்தையே மேல் நாட்டாரும் அணிந்து கொண்டிருந்தார்கள். சிலப்பதிகாரம் இதற்குச் சான்று.

★ லிபிய மக்கள் திருமணமான பெண்ணை அரசரிடம் அழைத்துச் சென்று ஆசிபெறுவர். தமிழ் நாட்டுப் பெண்கள் திருமணமான பெண்களை சான்றோர்களின் ஆசியையும், தெய்வத்தின் அருளையும் நாடி வணங்குவார்கள்.

★ லிபியா பெண்கள் திருமண விருந்தில் வருகை தந்த விருந்தினர்களிடம் பரிசுகளைப் பெற்றதும், பரிசு கொடுத்தவர்கள் ஒவ்வொருவரும் அந்த மணப்பெண்ணிடம் இன்பம் பெறுவார் கள். அதை எதிர்த்து அங்கிருந்த பினீசியர் தமிழர்கள் பரிசுகளை மட்டுமே பெற்று, பரிசளித்தவர்களிடம் வாழ்த்துதலைப் பெற்றார்கள். இந்தப் பழக்கம் இன்றும் இங்கே இருப்பதைப் பார்க்கலாம்.

★ ஐரோப்பா, எகிப்து, கிரேக்க, லிபியா போன்ற நாடுகளில் நான்கு குதிரைகள் பூட்டிய தேரை ஓட்டி அதிலே அரசர்கள் செல்வார்கள். இதற்கு முன்னரே, அகநானூறு, இராமாயணம், பாரதம் போன்றவற்றில் நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்களில் மன்னர்கள் பவனி வந்த காட்சிகளுக்குச் சான்றுள்ளன.

★ பினீசியர் தமிழர்கள் தங்களது உடலில் விபூதி பூசிக் கொள்ளும் பழக்கம் இருந்ததைக் கண்ட லிபியர், திரேசியர்கள் தங்களது உடலில் சிவப்பு நிறக் கலவையைப் பூசிக் கொண்டார்களாம்.

## 13. தமிழர் வரலாறு எழுதிட ஹிராடெடஸ் தரும் ஊக்கம்!

ஒரு நாட்டிற்கு வரலாறு எவ்வளவு அவசியமானது என்பதை எண்ணிய வரலாற்று ஞானி ஹிராடெடஸ், எத்துணை நுணுக்கமான செய்திகளை, கதைகளை, சம்பவங்களை அரிதாகச் சேர்த்துத் தரமுடியுமோ அத்துணையையும் அழகாக, அருமையாக,

விவரமாகத் தந்துள்ளதை இதுவரை ஓரளவாவது உணர்ந்து கொண்டோம்.

கிரேக்க - பாரசீக வரலாறுகளை, ஹிராடெடஸ் உலகுக்குக் கொடுக்கவில்லை என்றால், நாம் அந்த நாடுகளைப் பற்றி ஒன்றுமே அறிந்திருக்க முடியாது என்பதுதான் உண்மை. அந்த அளவுக்கு அவர், பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் நாடோடி ஞானியைப் போலச் சுற்றிச் சுற்றித் தேடிக் கண்டு பிடித்து 'வரலாறுகள்' என்ற நூலை அந்த மேதை மிகவும் அரும் பாடுபட்டுச் சேகரித்து எழுதி இருக்கின்றார். அதனால்தான், அவரை வரலாற்றின் ஆதித் தந்தை என்றும், உரைநடையின் முன்னோடி என்றும் இன்றும் உலகம் பாராட்டிக் கொண்டே இருக்கிறது.

இவற்றிக்கும் மேலாக, கிரேக்கர்கள், பாரசீகர்கள், சித்தர்கள், லிபியர்கள் ஆகியவர்களது பழக்க வழக்கங்களை, எழுத் தோவியங்களை, கல்வெட்டுக்களை கதைகளை, நீதிநெறிகளை, அந்தந்த நாடுகளின் நதியோட்டங்களை, அதன் நாகரிகங்களை, வானளாவி நின்ற எகிப்து நாட்டின் பிரமிடுகளை, அங்கங்கே வாழ்ந்த மன்னர்களை, வஞ்சகர்களை, அவர்களது சூழ்ச்சிகளை, நல்லவர்களை, நீதியை நிலை நாட்டிய பண்பாளர்களை, பண்பாளர்களை, பகட்டுக்காரர்களை, நல்லாட்சியாளர்களை, மனித நேயர்களை, அங்கங்கே உள்ள திருக்கோயில் தெய்வங் களை, மக்கள் செய்யும் வழிபாட்டு முறைகளை, எல்லாம் தொகுத்து புத்தகங்களாக்கி உலகுக்கு வழங்கி இருக்கின்றார்.

இவை எல்லாவற்றுக்கும் சிகரமாக, தமிழர் நாகரிகத்துக்கு எடுத்துக் காட்டாக, பினீசிரியர்கள் வரலாற்றை மிக நேர்மையாக ஆராய்ச்சி செய்து எழுதியுள்ள அவரின் வரலாற்று உழைப்பை நம்மால் மறக்க முடியாது.

பினீசியர்கள், தமிழ் நாட்டிலே இருந்து சென்ற தமிழர்கள் தான் என்பதை ஹிராடெடஸ் மிக அழகாக அருமையான சொலலே

வியங்களாக வரைந்து காட்டி இருக்கின்றார். தமிழ் நாட்டிலே வாழ்ந்த பனையேறிகள் தான், பாமேசியர் - பினீசியர் என்பதற்கான சொல்லாய்வு வடிவமும், அதற்கான அவர்களது பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், நாகரீகமுறைகள் அத்தனையை யும் தொகுத்துத் தந்து, மற்ற நாட்டினர்களின் பழக்க வழக்கப் பாண்பாடுகளையும் அத்துடன் விளக்கி, அவற்றை நம்மை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுமாறு விட்டு விட்டார்! அதுதானே பண்பட்ட அக்காலத்துக்குரிய ஒரு வரலாற்றாசிரியரின் அரும்பணி.

நமது தமிழ் நாட்டின் வரலாறு, 4000 ஆண்டுகளுக்கு முன்பேயே உலகின் மேல் நாடுகளில் பரந்து பரவியிருந்தது என்பதை நாம் நினைத்துப் பெரும் மகிழ்ச்சி கொள்ள, ஹிராடெடஸ் ஆராய்ச்சி நமக்குப் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. இதனால், தமிழன் எனப்படுபவன் யாராக இருந்தாலும் சரி, அவனது உள்ளம் பேரானந்தம் கொள்கின்றது.

இது மட்டுமா? ஹிராடெடஸ் கூறும் அக்காலத்து மன்னர்களின் வரலாற்றுச் சம்பவங்களில், பெரிய புராண பிள்ளைக் கறியமுது படைத்த சிறுத் தொண்ட நாயனார் சம்பவம், இந்திய நாட்டின் சோதிட வித்தகர் வராக மிகிரர் சம்பவங்கள். பொய்யா மொழிப் புலவரது நிகழ்ச்சிகள், அமெரிக்காவிலே கிடைத்த தமிழர் கல்வெட்டு; அதிலே எழுதப்பட்டுள்ள 'ஓம்' என்ற எழுத்துக்கள், தமிழர் சமயமான சைவ தெய்வச் சிவபெருமானுடைய லிங்க வடிவம், போன்ற ஓவிய வரலாறுகள் நம்மை வியப்பூட்டி உள்ளத்தை விம்மச் செய்கின்றன.

தமிழ் நாட்டின் பழக்க வழக்கங்கள், பனையேறித் தமிழர் களான பினீசியர்களால், உலகமெங்கும் பரவியுள்ளதை, இந்தப் புத்தகத்தின் இறுதியிலே நாம் தொகுத்துக் கொடுத்துள்ளோம். இதற்கான ஆதிக்கர்த்தா வரலாற்று மேதை ஹிராடெடசின் ஆழமான ஆய்வுணர்வுகளே ஆகும்.

இன்று வரை தமிழ் நாட்டு மக்களுக்குச் சரியான, உண்மையான தமிழ் நாட்டு வரலாறு யாராலும் எழுதப்படவில்லை. ஆனால், உண்மை என்ன? தமிழர்களுக்குள்ள மெமூரியா கண்டம் அதாவது நாவலந் தீவு கடற்கோள்களால் அழிக்கப்பட்டது முதல், முதல், இடை, கடைச் சங்கங்கள் மன்னர்களது ஆட்சிகள், பெரும்புலவர் வரலாறுகள், அப்போது நிலவியிருந்த பண்டைய முழு நாகரிகக் கூறுகள். பண்பாடுகள் தெளிவாக ஆராயப்படவில்லை என்பதே உண்மை. அவ்வாறிருக்க, எப்படிச் சரியான உண்மையான தமிழ்நாட்டு வரலாறு நமக்குக் கிடைக்கும்?

கடற்கோள்களால் பண்டையத் தமிழ் நூல்கள் எல்லாம் மறைந்துவிட்டன, தமிழ்ப் பகைவர்களால் நூல்கள் அழிக்கப்பட்டன என்றும், ஏதோ மறைமலையடிகளார், தேவநேயப் பாவணர், பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், கந்தையா பிள்ளை போன்ற சிலரது அரிய கடும் உழைப்புகளால், தமிழ்த் தாத்தா உ.வெ. சாமி நாத ஐயர் போன்ற மற்றும் சிலரால் அவர்கள் எழுதும் நூல்களில் அத்திப் பூத்தார்போல சில கருத்துக்களை அங்கங்கே கூறியுள்ளார் கள் என்ற மன நிறைவேயன்றி, வேறு ஒன்றும் இல்லை. இதனால் மட்டும் உண்மையான தமிழர் வரலாறு கிடைத்துவிடுமா?

ஆசியா மைனர் பகுதியிலே; கி.மு.484 ஆம் ஆண்டிலே தோன்றிய ஹிராடெடஸ் என்பவர், தமிழ் நாட்டின் தென் கோடியிலே பனையேறிகளாக வாழ்ந்த தமிழர்கள் கடல் மார்க்கமாக வந்து பினீசியர் என்ற பெயர் பெற்று, பிறகு ஒவ்வொரு நாட்டுக்கும் அவர்கள் சென்று, நடை மார்க்கமாகவும் நடந்து கடலூர்ந்தும் அமெரிக்கா சென்று, போன இடங்களிலே எல்லாம் தமிழர் பண்பாடுகளை உலகெங்கும் பரப்பினார்கள் என்று ஆராய்ச்சி செய்து அவற்றைத் தனது 'வரலாறுகள்' என்ற நூலிலே எழுதியுள்ளார் என்றால். அந்தச் சான்றோனை தமிழர் வரலாறும், தமிழர் பண்பாடும் பாராட்டாமல் இருக்க முடியுமா?

ஹிராடெடஸ் மட்டுமன்று, பிளினி, பெரிப்ளூஸ், மெகஸ்தனிஸ், தாலமி, ஸ்டிராபோ, அரியன் இண்டிகா, அல்பெருணி, இபின்படூடா, யுவான்-சு-வாங், பாகியான், இத்-சிங் போன்ற ஆய்வாளர்களின் துணை கொண்டாவது திண்மையான ஒரு தமிழ் நாட்டு வரலாறு எழுதப்படவேண்டாமா? அதற்கு இன்றைய தமிழ் இலக்கியங்களான திருக்குறள் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, ஐம்பெருங்காப்பியங்கள், கம்பராமாயணம், சேக்கிழார் பெரிய புராணம் ந.சி.கந்தையா பிள்ளை, கனக சபை பிள்ளை எழுதியது போன்ற நூல்களது உதவிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா? என்று, வரலாற்று நூல்கள் பல எழுதிய ஹிராடெடஸ் போன்று இன்று நம்மிடையே விளங்கும் வி.எஸ்.வி. ராகவன் தமிழ் உலகைப் பார்த்து வினா தொகுத்துள்ளார்! கிடைக்குமா விடை?

ஆங்கில நூலறிவு அதற்கு வேண்டாமா என்று சிலர் கேட்கலாம்; வேண்டும் தான். நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களைக் கொண்டு, நமது அறிவை அகலமாக்கி, தமிழ்ர்க்கு தமிழ் நாட்டுக்கு - இருந்த மிகப் பெரிய வரலாற்றை ஆய்ந்து, ஒரு முகமாக்கி, உண்மைகளை ஊடுருவி 'தமிழ் நாட்டின் ஆதி வரலாறு' என்ற சங்கோசையை வழிகாட்டியாக நிறுத்தி ஊத வேண்டாமா?

எனவே, நாகரிகம் என்றால் என்ன என்பதையே அறியாத அன்றைய உலகத்தில், தமிழ் நாகரிகம் என்ற குழந்தையை, பண்பாட்டுணர்வுகள் என்ற தொட்டிலிலே போட்டு உலகின் ஒரே மொழியாக இருந்த தமிழ் மொழியால் ஆராரோ பாடிய தமிழ் நாகரிகம் தான் முதன் முதல் உலகில் தோன்றிய நாகரிகம், அந்த நாகரிகம் தான் இன்று உலகமெல்லாம் பரவிக்கிடக்கின்றது. அதனை அடிப்படைத் தத்துவமாக வைத்துத்தான் கணியன் பூங்குன்றனார், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நாகரிக ஜோதிடத்தைக் கணித்துக் கூறினார் என்பதற்கு, ஹிராடெடஸின் கருத்தாய் ஓவியங்கள் எல்லாம் சான்றாக நமக்கு ஊக்கம் அளித்து நிற்கின்றன! இனியாவது, யாராவது தமிழ் நாட்டின் ஆதிவரலாற்றை எழுதுவார்களா?

★ ★ ★